உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—உசு] பிரபவ-ஹ மார்கழிமீ [பகுதி—உ.

Vol. XXVI. December-1927. January-1928. No. 2.

## பிரகிருதிசாஸ்த்ரம்.

## (PHYSICAL SCIENCE)

(மதுரை அமெரிக்கன்கல்லூரிப் பௌதிகசாஸ்த்ர ஆசிரியர்

ஸ்ரீமான் N. R. கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள் M.A., எழுதியது)

### பௌதிகம்.

### (PHYSICS.)

### II. உஷ்ணம் (HEAT.)

[உஅ-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

உஷ்ணப்பிரவிருத்தி இயல் (Heat Propagation):—இவ்வியலில், உஷ்ணமானது இடம்விட்டு இடம் சஞ்சரிக்கும் வகைகள் ஆராயப்பெறும். உஷ்ணப்பிரவிருத்திமுறைகள் மூன்று. அவை, முறையே கைம்மாற்றச்சேலவு (Conduction), பிறழ்ந்தசேலவு (Convection), கதிர்ச்சேலவு (Radiation) என்பனவாகும். கதிர்ச்செலவு, ஒரு பொருளுமிராத பாழ்வெளிகளில் (Vacuum or space free from matter) நிகழும். பிறழ்ந்தசெலவு, தண்ணீர் காற்று முதலிய திரவப் பொருள்களில் (fluids) நிகழும். கைம்மாற்றச்செலவு, கடினப்பொருள்களில் நிகழும்.

கைம்மாற்றச்செலவு (Conduction):—ஒரு இருப்புக்கழியைக் கையிற்கொண்டு அதன் நுனியை அனலில்வைத்திருந்தால், கொஞ்ச

நேரத்தில் உஷ்ணமானது அனலிலிட்ட நுனியிலிருந்து புறப்பட்டுக் கழியினூடேசென்று கையிற்பிடித்துள்ளநுனிக்கு வந்துசேருகிறது. இது எப்படியெனின், ஒரு குளத்திலிருந்து தீப்பற்றியதோர்வீட்டிற் குத் தண்ணீர்கொண்டுபோய்ச்சேர்க்கவேண்டி வழியில் வரிசையாக மனிதர்களை நிறுத்திக் குளத்திலிருப்பவன் தண்ணீர்க்குடத்தை அடுத் திருப்பவன்கையிற் கொடுக்க, அவன் அதனை அடுத்தவனுக்குக் கொடுக்க, அவ்வண்ணமே மற்றவரும் செய்துபோக, தண்ணீர் சேர வேண்டிய இடத்திலுள்ளான்கைக்கு வந்துசேருவதேபோலும். வரிசையிலுள்ள மனிதர் கைக்குக்கை தண்ணீரை மாற்றினார்களேயன்றித் தத்தம் இடத்தைவிட்டுப் பெயரவில்லை. இம்மனிதர்கள் தத்தம் ஸ்தானங்களிலே நின்று உடம்பைமட்டும் அசைத்துக் குடத்தைச் செலுத்தியதுபோலவே, இரும்பிலுள்ள அணுக்களும் தத்தம் ஸ்தானங் களிலேயேநின்றசைந்து, உஷ்ணத்தைக் கைக்குக் கொணர்ந்துசேர்க் கின்றன. இத்தகைய உஷ்ணப்பிரவிருத்தி கைம்மாற்றச்செலவு (Conduction) எனப்படும்.

இக் கைம்மாற்றச்செலவுக்கு இணங்கி வழியளிக்கும் திறம் வஸ் துக்களுக்குப் பற்பலவாறாக இருக்கும். இந்தத்திறத்தினை, கைம்மாற் றம் (Conductivity) எனல் தகும். வஸ்துக்கள் இருபான்மையன வாகும். அவை கைம்மாற்ற வஸ்துக்கள் (Conductors) கைம்மாற்ற விருத்தவஸ்துக்கள் (Non-conductors) எனப்படும். கைம்மாற்ற வஸ்துக்கள் கைம்மாற்றச்செலவுக்கு வழியளிப்பன; அவை இரும்புமுத லிய உலோகங்களாகும். கைம்மாற்றவிருத்தவஸ்துக்கள் அச்செலவுக்கு வழிவிடா: அவை கல்நார் (Asbestos) மரத்துண்டுமுதலியனவாகும்.

இனி, பிறழ்ந்தசெலவினை (Convection) ச் சுருக்கமாகக் கூறு வோம். இது, தண்ணீர் ஆகாயத்திலுள்ள வாயு முதலிய திரவவஸ்துக் களில் நிகழ்வதாகும். பிறழ்ந்தசெலவினை ஒருபரிசோதனையால் விளக்க லாம். ஒரு பெரிய பாண்டம் நிறையக் குளிர்ந்ததண்ணீரை நிரப்பி வெயிலில்வைத்து, சிலநாழிகைசென்றதற்பின் நீரினுள்ளே கையைப் புகுத்திப்பார்த்தால், அதன் ஆழ்ந்தபாகம் குளிர்ச்சியாகவும் மேனின்ற பாகம் உஷ்ணமாகவும் இருக்கும். இவ்விதமாகக் கீழ்ப்பாகத்திற்கு உஷ் ணம் போய்ச்சேராததினால், தண்ணீர் கைம்மாற்றவிருத்தப்பொருள்

(Non-conductor) என்பது கொள்ளப்படும். ஆனால், குளிர்ந்ததண்ணீர் நிறைந்ததோர் பாண்டத்தை அடுப்பின்மேல்வைத்து விறகுகளை எரித்தால், உஷ்ணமானது பாண்டத்திலுள்ள தண்ணீர் முழுதிலும் ஒருசீராகப் பரவுகின்றது. இதற்குக்காரணம் பின்வருமாறு கூறப்படுகின்றது: பாண்டத்தின் அடித்தடத்தை ஒட்டியுள்ள தண்ணீர்ப்பகுதியே தீயிலிருந்து உஷ்ணத்தை முதன்முதலாகப் பெறுகின்றது. எனவே இப்பகுதியானது மேலேநிற்கும் தண்ணீர்ப்பகுதியைக்காட்டிலும் அதிகமான உஷ்ணநிலையிலிருக்கிறது. உஷ்ணமானதண்ணீர் குளிர்ந்த தண்ணீரைக்காட்டிலும் இலேசானதாதலால் மேலேநிற்கும் குளிர்ந்த தண்ணீர்ப்பகுதி பாத்திரத்தின் அடித்தடத்திற்கு ஆழ்ந்துசெல்லுகின்றது; அத்தருணமே கீழேயுள்ள இலேசான உஷ்ணநீர் பாத்திரத்தின் மேற்பாகத்தைநோக்கி எழுகின்றது. இப்படியாகவும், கீழ்ச்சென்ற பகுதி மேற்சென்றபகுதியைக்காட்டிலும் உயர்ந்த உஷ்ணநிலையைப் பெறுகின்றது; எனவே முன்போலவே மேற்பகுதி கீழே இறங்குகின்றது. கீழ்ப்பகுதி மீண்டும் மேற்செல்லுகின்றது. இவ்விதமாக, கொஞ்சநேரத்தில், தண்ணீர்ப்பகுதிகள் பிறழ்ந்துசென்றுபோகவே, பாத்திரத்திலுள்ள நீர்முழுதிலும் உஷ்ணம் வியாபிக்கின்றது. இவ்விதமாகப் பொருளின்பகுதிகள் பிறழ்ந்துசெல்வதனாலேற்படும் உஷ்ணப்பிரவிருத்தியே பிறழ்ந்தசெலவு (Convection) எனப்படும். ஆகாயத்திலுள்ள காற்றானது, தென்றலாகவும், பருவக்காற்றாகவும் (Monsoon), புயலாகவும் (Tempest) வீசுவது, பூமிப்பரப்பிலும் கடற்பரப்பிலும் ஏற்படுகின்ற சீதோஷ்ணஸ்திதிமாறுபாடுகளால் விளையும்உஷ்ணத்தின் பிறழ்ந்தசெலவினையே (Convection of Heat) காரணமாகப்பெறும்.

இனி, கதிர்ச்செலவினை (Radiation) கவனிப்போம். நடுப்பகலில் வெளியேசென்றால் உடம்பில் உஷ்ணம் தாக்குகின்றது. வெயில் காய்கின்றது என்கிறோம். இந்த உஷ்ணம் எங்கிருந்து, எப்பொருளினூடே வந்துசேருகின்றது? இவ்வுஷ்ணம் சூரியனிடத்திலிருந்து வருகிறது. சூரியனுக்கும் பூமிக்குமுள்ள இடைவெளிவழியாக வருகிறது. சூரியனுக்கும் பூமிக்குமுள்ள தூரம் ஒன்பதுகோடிமைல் என வானசாஸ்திரிகள் (Astronomers) கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒருகிச்சிலிப்பழத்தைச்சூழ்ந்து தோலிருப்பதுபோல, பூமியைச்சுற்றிச் சுமார் ஐந்து அல்லது ஆறுமைல் பருமனுள்ளதோர் கவசமாக வாயு

சூழ்ந்து நிற்கின்றது எனவும் ஆராய்ச்சிமுறைகளாற் கண்டுபிடித்திருக்கிறார்கள். இக்காற்றுக்கவசத்திற்கப்பால் சூரியனிடம் போகும்வரைக்குமுள்ள மார்க்கம், ஒருபொருளுமில்லாத பாழ்வெளியேயாம் (Vacuum). இப்பாழிடத்தில் பிரகிருதிசாஸ்திரத்திற் பொருளென*வகுத்த யாதொன்றும் கிடையாது. இப்பாழ்வெளியினூடே சூரியனது உஷ்ணமானது, பொருளின் ஆதாவு சிறிதுமின்றிக் கதிர் உருவமாக (In the form of Rays) நம்மிடம் வந்துசேருகின்றது. இத்தகைய உஷ்ணப்பிரவிருத்திக்குக் கதிர்ச்சேலவு (Radiation) எனப் பெயர். இக்கதிர்களுக்கு வழியளிக்குமிப் பாழ்வெளியில் யாதோவுள்ளது. அது நிச்சயம் பொருளல்ல. இப்படிப் பொருளாக இராது இடத்தை நிரப்பிக் கதிர்ச்செலவுக்கு வழியளிக்கும் அவ்யக்தத்திற்கு மேனாட்டு ஆசிரியர் ஈதர் (Aether) எனப் பெயரளித்திருக்கிறார்கள். இந்த ஈதரானது பொருள் நிறைந்தோ, அல்லது பொருள் இல்லாமலோ உள்ள இடம் யாவற்றையும் நிரப்பி ஸர்வவ்யாபியாய் நிற்கின்றது என்பதே தற்காலத்திய பிரகிருதிசாஸ்த்ர ஆராய்ச்சியாளரின் கொள்கையாகும். இதன் இருக்கையை நிச்சயமாகக்கொண்டே பரிசோதனைகளைத் தொகுத்துப் பிரகிருதிசாஸ்த்ரத்தை வளர்த்திருக்கிறார்கள். ஈதரின் தத்வமானது ஒளி, காந்தம், மின்சாரம் முதலிய பிரகிருதிசாஸ்திரப்பகுதிகளிற் பெரிதும் ஊகித்தறியப்படுகின்றது.

கதிர்ச்செலவின் (Radiation) ஆராய்ச்சியாற்கிடைக்கும் பிரயோசனங்களில், சூரியன், கிரகங்கள், நக்ஷத்திரங்கள் முதலியவற்றின் உஷ்ணநிலைகளை அளவிட்டறிதல் ஒன்றாகும். ரேடியாமீட்டர் (Radiometer) எனப் பெயர்வாய்ந்ததோர் கருவியால், சூரியனது உஷ்ணநிலை சுமார் 7000° செ. க்குக் குறைந்து 6000° செக்கு மேற்பட்டிருப்பதாகவும், சுக்கிரனது உஷ்ணநிலை 69° செ. எனவும், செவ்வாயின் உஷ்ணநிலை -39° செ. எனவும் நக்ஷத்திரங்களின் உஷ்ணநிலைகள் சூரியனதைக் காட்டிலும் அதிகமாயிருத்தல்கூடுமெனவும் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்வளவில் உஷ்ணப்பிரவிருத்திஇயலை நிறுத்தி உஷ்ணஇயந்திரஇயலைக் கவனிப்போம்.

[தொடரும்.]

*"பளுவுடன் கூடி இடத்தை நிரப்புவதே பொருள்" என ஆரம்பத்திற் கூறிய பொருளினிலக்கணம் இங்கும் நினைத்துக்கொள்ளத்தக்கது.

# தொல்காப்பியச்சொல்லதிகாரக்குறிப்பு.

தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்
ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள்
எழுதுவது.

[சo—ம் பக்கத் தொடர்ச்சி.]

12-வது சூத்திரம்.

ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை யறிசொற் காகிட னின்றே

இச்சூத்திரத்தின்பொருள்:—

உரையாசிரியர்:— ஆண்மையிற்றிரிந்து பெண்மைநோக்கிநின்ற பெயர்ப்பொருள் ஆண்மகனையறிவிக்கும் ஈற்றெழுத்தினாற் சொலற்பாட்டிற்கு ஏலாது என்றவாறு; ஒழிந்த [1]இரண்டுபெயர்க்கும் ஒக்கும் என்பதாம். 'ஆகிடனின்றே' என்பதனாற் 'பேடிவந்தான்' எனவும் ஆண்பாற்கும் ஏற்கும்.

சேனாவரையர், நச்சினார்க்கினியர்:-உயர்திணைமருங்கிற் பால்பிரிந்திசைக்கும் என்று மேற்கூறப்பட்ட ஆண்மைதிரிந்தபெயர்நிலைக்கிளவி ஆடூஉவறிசொல்லொடுபுணர்தற்குப் பொருந்தும் இடனுடைத்தன்று என்றவாறு.

உரையாசிரியர்மதப்படி பேடிவந்தாள், பேடியர்வந்தார் என்று பெரும்பான்மைவரும்; பேடிவந்தான் என்று சிறுபான்மைவரும். சேனாவரையர், நச்சினார்க்கினியர் மதப்படி பேடிவந்தாள் பேடியர்வந்தார் என்று வரும். ஆண்மையறிசொற் காகிடனின்றே என்பதால் ஆடூஉவறிசொல் ஒரு போதும்வாராது என்று சூத்திரத்தில் இருந்தபோதிலும், சிறுபான்மை வருமென்று உரையாசிரியர்சொன்னது அவர்காலத்து வழக்கையொட்டிப் போலும். தொல்காப்பியருக்கு அவ்வாறானகருத்தில்லையென்பதே மற்றைச் சேனாவரையர்க்கும் நச்சினார்க்கினியர்க்கும் கொள்கை என்று தோன்றுகின்றது.

---

[1] இரண்டுபெயர் என்றது, உயர்திணைப்பெண்பால் பலர்பாற்பெயர்களை.

'இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், எய்தியது விலக்குதல் நுதலிற்று' என்று உரையாசிரியர் சொல்லுகிறார். இதன்கருத்து:—5-ம் சூத்திரத்தில் உயர்திணைமருங்கிற் பால்பிரிந்திசைக்கும் எனப் பொதுவாகக் கூறியதாலும், பேடிக்கு ஆண்மை சிறிது இருப்பதாலும், 11-ம் சூத்திரப்படி பேடி என்னுஞ்சொல் ஆடூஉமுடிபைப்பெறலாமென்பதை இச்சூத்திரம் விலக்குகின்றது என்பதே. இக்கருத்தையுட்கொண்டுதான் சேனாவரையரும், 'இச்சூத்திரத்தைப் 'பெண்மைசுட்டிய' என்னுஞ் சூத்திரத்தின்பின்வையாது ஈண்டு வைத்தார், இது வழுவற்க என்கின்றதாகலான்' என்றது.

உரையாசிரியர் பெயர்நிலைக்கிளவி என்பதற்கு முற்சூத்திரத்திற் பெயரிற்றோன்றும்பாலறிகிளவி என்பதற்குப்போல, பெயர்ப்பொருள் என்று பொருள்கொடுக்கிறார். அதுபற்றி முற்சூத்திரக்குறிப்பில் ஆராய்ந்தாம்.

13-வது சூத்திரம். **செப்பும் வினாவும் வழாஅ லோம்பல்.**

இச்சூத்திரத்தின்பொருள்:—செப்பையும் வினாவையும் வழுவாமற் போற்றுக என்றவாறு.

## செப்பின் இலக்கணம்.

சேனாவரையர்:—வினாயபொருளை யென்னாது அறிவுறுப்பது செப்பெனின் அவ்விலக்கணம் வினாவிற்குஞ்செல்லுமாகலான் குன்றக்கூறலாமென்று கருதி, 'வினாயபொருளை அறிவுறுத்தலே' இலக்கணம் என்று கொண்டார். அங்ஙனங்கொண்டபின் 'குமரியாடிப்போந்தேன், சோறு தம்மின்' என்பதும் 'அறியலுறுதலையுணர்த்தாது ஒன்றனை யறிவுறுத்துநிற்றலிற் செப்பின்பாற்படும்' என்றார். ஆகவே, அவர் கருத்து, வினாயபொருளை யறிவுறுப்பது அல்லது வினாப்பொருளை யெதிர்பார்த்து ஒன்றினை அறிவுறுப்பது செப்பு என்பது.

## செப்பு எத்தனைவகைப்படும்?

உரையாசிரியர்:—'ஆறுவகைப்படும்; வினாவெதிர்வினாதலும், ஏவுதலும், மறுத்தலும், உற்றதுரைத்தலும், உறுவதுகூறலும், உடம்படுதலும் என'.

சேனாவரையர்:—'இரண்டுவகைப்படும்: [1]செவ்வனிறையும், [2]இறை பயப்பதும் என'.

நச்சினார்க்கினியர்:— 'செவ்வனிறையும் இறைபயப்பதுவுமென இருவகைத்து. அவற்றுள், இறைபயப்பனதாம் - வினாவெதிர்வினாத லும், ஏவுதலும், மறுத்தலும், உற்றதுரைத்தலும், உறுவதுகூறலும், உடம்படுதலும், சொற்றொகுத்திறுத்தலும், சொல்லாதிறுத்தலும் என எண்வகை'.

உரையாசிரியர் 'செப்பு ஆறுவகைப்படும்' என்று சொல்லுவது பொருந்தாது என்பதற்குச் சேனாவரையர் இரண்டுகாரணங்கள் கூறியுள் ளார். (1) உயிர் எத்தன்மைத்து என்றவழி உணர்தற்றன்மைத் தென்றன் முதலாயின மேற்கூறிய ஆறுவகையிலும் அடங்கா. (2) மறுத்த லும் உடம்படுதலும் செப்பு அல்ல; ஏனெனில் அவையிரண்டும் 'வினாவப்பட்டார்கண்ணன்றி ஏவப்பட்டார்கண்ணும்'. அஃதாவது 'நீ செய்' என்று ஒருவன் ஏவ, மற்றொருவன் 'செய்கின்றேன்' என்பது உடம்படுதலும், 'செய்யேன்' என்பது மறுத்தலு மாகுமேயன்றி, 'நீ செய்கிறாயா?' என்று ஒருவன் வினவ, மற்றொருவன் 'செய்கிறேன்' என்றுவது 'செய்யேன்' என்றுவது சொன்னால் அவை உடம்படுதலும் மறுத்தலும் ஆகா. எங்ஙனமெனில், 'நீ செய்' என்று ஏவும்பொழுது ஏவுகிறவனது எண்ணம் மற்றவன் செய்யவேண்டுமென்பதே. அப் பொழுது 'செய்கின்றேன்' என்றால் சொல்லுகிறவனது எண்ணத்தோடு உடம்படுதல் ஆயிற்று. 'செய்யேன்' என்றால் அவன் எண்ணத்தை மறுத்தல் ஆயிற்று. 'நீ போகிறாயா?' என்று வினாவும்போது வினாவு வோனின் எண்ணம் மற்றவன் போகவேண்டுமென்றுவது போகவேண்டா மென்றுவது திண்ணமாய் அறியமுடியாது. அதற்கு விடையாக, 'போகிறேன்' என்றுவது, 'போகேன்' என்றுவது, கூறுவது வினாவப்பட் டான் தன்கருத்தை வெளிப்படுத்துவதேயாம். ஆதலால், சேனாவரை யர் செப்பைச் செவ்வனிறையென்றும் இறைபயப்பதென்றும் இருவகை யாகக்கொண்டார். நச்சினார்க்கினியரோ சேனாவரையர்சொன்ன இரு

[1]செவ்வனிறை=நேரானவிடை.

[2]இறைபயப்பது=நேரானவிடையாகாமற் பொருளை யூன்றிநோக்க விடை யாக இருப்பது.

வகையையும் ஒப்புக்கொண்டு, இரண்டாவதாகிய இறைபயப்பது எண் வகைப்படும் என்றார். அவ்வெண்வகையாவன, உரையாசிரியர்கூறியுள்ள அறுவகையும், சொற்றெருத்திறுத்தல், சொல்லாதிறுத்தல் என்பனவுமே. இங்குச் சேனாவரையர் 'மறுத்தலும், உடம்படுதலும் செப்பில் அடங்கா' என்று சொல்லியிருப்பதை மறுக்காமல், அவைகளை இறை பயப்பதன்பிரிவாகக்கொண்டார். இங்ஙனம் உரையாசிரியரும் நச்சினார்க்கினியருங் கொண்டது வினாவிற்கு விடையாகவரும் எதிர்மறைக்கும், ஏவுதலுக்கு விடையாகவரும் எதிர்மறைக்குமுள்ள நுட்பமான வேறுபாட்டைக் கருதாமையாலாகும். சொல்லாதிறுத்தல் என்பதற்கு, 'குமரியாடிப்போந்தேன், ஒருபிடிசோறுதம்மின்' என்று உதாரணம் நச்சினார்க்கினியர் 15-வது சூத்திரத்திற் கூறியுள்ளார். செப்பின் இலக்கணம் தன்மதத்தில் என்னவென்று சொல்லவில்லை. சேனாவரையர்மதமே இவர்மதம்போலும்.

## வினாவின் இலக்கணம்

அறியலுறவை வெளிப்படுப்பது வினாவென்று சேனாவரையர் கூறியுள்ளார். அஃதாவது தான் அறியவேண்டுமென்று கருதியதைத் தெரிவித்தல்.

## வினா எத்துணை வகைப்படும்?

உரையாசிரியர்:—ஐந்துவகைப்படும்: அறியான்வினாதல், அறிவொப்புக்காண்டல், ஐயமறுத்தல், அவனறிவுதான்கோடல், மெய்யவற்குக்காட்டல்.

சேனாவரையர், நச்சினார்க்கினியர்:—மூவகைப்படும்: அறியான் வினாவும், ஐயவினாவும், அறிபொருள்வினாவுமென. உரையாசிரியர் அறிபொருள்வினாவை அறிவுவொப்புக்காண்டலும், அவனறிவுதான்கோடலும் மெய்யவற்குக்காட்டலும் என விரித்து, ஏனையகூட்டி, ஐந்தென்றார்.

## வினாவழுவமைதி உண்டா இல்லையா ?

15-வது சூத்திரத்தில் உரையாசிரியர் வினாவழீஇயினவிடத்து அமையாது என்றார். 'சேனாவரையர் 'யாதெனவரூஉம் வினாவின் கிளவி.........' (சொல். 32). 'வன்புற வரூஉம் வினாவுடை வினைச் சொல்......' (சொல். 244) இவ் விரண்டுசூத்திரங்களாலும் வினாவழு

அமைக்கப்படுவதால் உரையாசிரியரது உரை போலியுரையென்றார். நச்சினார்க்கினியர் 'செப்பும் வினவும் வழாஅ லோம்பல்' என்னும் இச்சூத்திரத்தின்கண் சேனாவரையரைப்போல, 'செவ்வனிறையும் அறியான் வினாவும், ஐயவினாவும், வழாநிலையாதலின் வழாஅலோம்பல் என்பதனாற் கொள்க. ஏனைய வழுவமைப்புழிக்காண்க' என்று சொல்லிவிட்டு 15-ம் சூத்திரவுரையின் இறுதியில் 'வினாவழீஇயின இடத்து அமையாதாம்' என்று சொல்லுகிறார். இது முன்னர்ச்சொன்னதற்கு மாறுபாடாயுள்ளது; சேனாவரையர் காட்டின 'யாதெனவரூஉம் வினாவின்கிளவி.......' 'வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல்......' என்றவைகளுள் முன் சூத்திரத்தால் வழுவமைதி கூறப்படவில்லையென்று நச்சினார்க்கினியர் சேனாவரையருக்கு மாறுபாடாகக்கருதினாலும், இரண்டாவதுசூத்திரத்துக்குச் சேனாவரையர்போலவே பொருள்கொண்டு அவர்கொடுத்த உதாரணமே கூறியுள்ளார். அஃதாவது 'ஒருவன் கதத்தானாக களியானாக மயங்கி இன்னாங்கு உரைத்துப் பின் தெருண்டவழி, அவ் வின்னாங்கு உரைக்கப்பட்டான் 'நீ என்னை வைதாய்' என்றக்கால், 'யான் வைதேனோ?' எனத் தான் வையாமையை வலியுறுத்துதற்குக்கூறியதுதானே, அப்பொழுது வைதேன் நோகாதே என நேர்ந்தமைபடவும் நிற்கும் என்றவாறு.' என்பது. ஆதலால், சேனாவரையர் உரைத்த வினாவழுவமைதியும் உண்டு என்று விளங்குகிறது.

பாடபேதம்:—தாமோதரம்பிள்ளையவர்களின் சேனாவரையப்பதிப்பில் 'வினையபொருளை வினவா வுணர்ந்து தான் குறித்தபொருளைச் செப்பாவுணர்த்துகின்றானாகலின்' என்றுளது. சைவசித்தாந்தக் கழகப்பதிப்பில் வினவாவுணர்ந்து என்பதற்கும் தான் என்பதற்கும் நடுவில் 'வினையபொருளையன்றி' என்று சேர்த்துளது. இரண்டு பாடத்துக்கும் பொருள் ஒன்றேயாயினும், பின்சொன்ன பாடம் தெளிவாயுள்ளது. அங்ஙனமே மறுத்தலும் உடம்படுதலும் ஏவப்பட்டார்கண்ணவாகலானும் என்று பிள்ளையவர்கள்பதிப்பில் உளது. சைவசித்தாந்தக் கழகப்பதிப்பில் உடம்படுதலும்என்பதற்குப்பின் வினவப்பட்டார்கண்ணன்றி என்றுஞ் சேர்த்துளது. இங்கும் பின்சொன்னபாடம்சிறக்கும்.

14-வது சூத்திரம். வினவுஞ் செப்பே வினவெதிர் வரினே.

இச்சூத்திரவுரையிற் சைவசித்தாந்தக்கழகப்பதிப்பில் 'உண்பலேன்பதும் கருத்துப்பொருளாகலில்' என்ற பாடமும், தாமோதரம் பிள்ளையவர்கள்பதிப்பில் 'உண்பலேன்பது கருத்துப் பொருளாகலில்' என்று பாடமும் உள்ளன. உம்மைக்குப் பொருள்விளங்காமையாற் பின்சொன்ன பாடமே பொருந்துகிறது.

15-வது சூத்திரம். செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே
யப்பொருள் புணர்ந்த கிளவி யான.

இங்கே 'அப்பொருள்' என்பதற்கு வினப்பொருள் என்று பொருள். 'அ' என்னுஞ் சுட்டு முன்சூத்திரத்து 'வினவைக்' குறிக்கிறது.

பாடபேதம்:—தாமோதரம்பிள்ளையவர்கள் சேனவரையப்பதிப்பிற் 'பொழுதாயிற்றேன்றும், இவை செவ்வனிறையல்லவேனும்' என்றுளது. சைவசித்தாந்தக்கழகப்பதிப்பிற் 'பொழுதாயிற்றேன்றும் வரும்; இவை செவ்வனிறையல்லவேனும் என்றுளது. பின்பாடமே பொருத்தமானது.

16-வது சூத்திரம். செப்பினும் வினவினுஞ் சினைமுதற் கிளவிக்
கப்பொரு ளாகு முறழ்துணைப் பொருளே.

இதன்பொருள் :—செப்பின்கண்ணும் வினவின்கண்ணும் மாறுபாடும் ஒப்புமையுங் கூறுமிடத்துச் சினைக்கிளவிக்குச்சினைக்கிளவியையும் முதற்கிளவிக்கு முதற்கிளவியையுங் கொள்ளவேண்டுமென்பது.

உரையாசிரியர்:—'துணை' யென்றதனுன் எண்ணுமிடத்தும் இனமொத்தனவே யெண்ணுக; மூத்தும், மணியும், பொன்னும் என.

சேனவரையர், நச்சினர்க்கினியர்:—தன்னினமுடித்தலென்பதனாற் பொன்னுந் துகிரு முத்து மணியு மென வெண்ணுங்காலும் இனமாயபொருளே எண்ணப்படுமென்பது கொள்க.

17-வது சூத்திரம். தகுதியும் வழக்குந் தழீஇயின வொழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே.

இச்சூத்திரத்தின்பொருள் :—தகுதிபற்றியும் வழக்குப்பற்றியும் நடக்கும் இலக்கணத்திற் பக்கச்சொற் கடியப்படா என்பதே. இப்பொருளையே உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் மூவரும் கூறியுள்ளார்கள். ஆனால், தகுதியென்பதன்பொருளில் உரையாசிரியர் மதம் வேறு; சேனாவரையர்மதம் வேறு. நச்சினார்க்கினியர் சேனாவரையர் மதத்தையே கைப்பற்றினார்.

## தகுதி.

உரையாசிரியர்:—தகுதியென்பது மூன்றுவகைப்படும். மங்கல மரபினாற் கூறுதலும், இடக்கரடக்கிக்கூறுதலும், குழூவின்வந்தகுறிநிலை வழக்கும் என. செத்தாரைத் துஞ்சினார் என்றலும், சுடுகாட்டை நன்காடு என்றலும் மங்கலமரபினாற்கூறுதல். இடக்கரடக்கிக்கூறுதல் வருமாறு :—கண்கழீஇவருதும்.....................பொறையுயிர்த்தார் எனவும் வரும். இனி, குழூவின்வந்த குறிநிலைவழக்கு:—பொற்கொல்லர் பொன்னைப் பறி என்றும், வண்ணக்கர் காணத்தை நீலம் என்றும் வரும்.

சேனாவரையர் :—தகுதியென்பது. அப்பொருட்குரியசொல்லாற் சொல்லுதல் நீர்மையன்றென்று அதுகளைந்து தீக்கதோர்வாய்பாட்டாற் கூறுதல். அது செத்தாரைத் துஞ்சினாரென்றலும்......கெட்டதனைப் பெருகிற்றென்றலு மென இத்தொடக்கத்தன.

இங்குச் சேனாவரையர் மங்கலமரபினாற்கூறுதலைமட்டும் ஏற்றுக் கொண்டு இடக்கரடக்கிக் கூறுதலும், குழூவின்வந்த குறிநிலைவழக்கும் உரையாசிரியர்சொல்வது பொருத்தமில்லையென்றுகூறி அதற்குக் காரணம் "குழூவின்வந்தகுறிநிலைவழக்குச் சான்றோர்வழக்கின் கண்ணும் அவர்செய்யுட்கண்ணும் வாராமையின் அமைக்கப்படாவாக லானும், இடக்கரடக்கு 'அவையல்கிளவிமறைத்தனர்கிளத்தல்' (தொல் சொல். 442) எனவும், 'மறைக்குங்காலை மரீஇயதொரா அல்' (தொல். சொல். 443) எனவும் முன்ன ரமைக்கப்படுதலானும் அவர்க் கது கருத்தன்றென்பது" என்று கூறுகிறார். குழூவின்வந்த குறிநிலை வழக்குச் சான்றோர்செய்யுட்கண் காணப்படாவிடினும், அவரது வழக்குக்கண்வாரா என்று கொள்வதற்கு இடமின்மையால் அச்சேனா

வரையர்சொல்லுவது பொருந்துமா என்று ஐயம் உண்டாகிறது. இடக்கரடக்கிக்கூறுதலைப்பற்றி 'அவையல்கிளவி...' என்னுஞ் சூத்திரத்திற் கூறினாராயினும், இச்சூத்திரத்திற் கூறியுள்ள பொருளுக்கும் அச்சூத்திரத்திற் கூறியுள்ள பொருளுக்கும் சிறிது வேறுபாடு உளது. 'அவையல்கிளவி...' என்னுஞ்சூத்திரத்தில் அவையிற் கூறத்தகாத சொற்களைக் கூறக்கூடாது என்பது முக்கியாமிசம்; இச்சூத்திரத்திலோ அச்சொற்களுக்காகக்கூறுந் தகுதிச்சொற்கள் தள்ளத்தகுந்தனவல்ல என்பது முக்கியாமிசம். 'அவையல்கிளவி' என்னுமிடத்து முக்கியாமிசம் மறுத்தலேயென்று கொள்ளாக்கால் மறுத்தல், வேறொன்று கிளத்தல் என்ற இரண்டு விதேயங்கள் கொள்ளவேண்டிவரும். அது வாக்கியபேதமென்னுங் குற்றத்திற்கு இடனாம். இனி இச்சூத்திரத்தாலே அவையல்கிளவியைக் கிளக்கவேண்டுமுறை பெறப்படுதலால் அவையல்கிளவி என்ற சூத்திரம் வேண்டாபிற எனின்,—செத்தாரென்னும் அமங்கலச்சொல்லும் இலக்கணமாகக்கொண்டு வழங்கப்படுதல்போல அவையல்கிளவி தகுதிச்சொல்லால் வழங்கப்படுவதன்றி மறைக்கப்படாமலே வழங்குவதும் இலக்கணமாய்விடுமாதலால் அதனைத் தவிர்த்தற்கு அவையல்கிளவியென்ற சூத்திரமும் வேண்டுமென்க.

### வழக்கு.

உரையாசிரியர்:—வழக்காறு இருவகைப்படும். இலக்கண வழக்கும், இலக்கணத்தொடுபொருந்தின மரூஉவழக்கும் என. இல்முன் என்பதனை முன்றில் என்று தலைதடுமாறச்சொல்லுதல் இலக்கணத்தொடுபொருந்திய மரூஉவழக்கு.

சேனாவரையர்:—வழக்கென்பது காரணமின்றி வழங்கற்பாடே பற்றி வருவது. பண்புகொள்பெயராயினும் பண்புகுறியாது சாதிப்பெயராய் வெள்யாடு, வெண்களமர், கருங்களமர் என வருவனவும், குடத்துள்ளும் பிறகலத்துள்ளுமிருந்த நீரைச் சிறிதென்னாது சிலவென்றலும், அடுப்பின்கீழ்ப் புடைபடுப்பினை மீயடுப்பென்றலும், பிறவும் வழக்காறும்.

இங்குச் சேனாவரையர் இலக்கணவழக்கைமட்டும் ஒப்புக்கொண்டு மரூஉமுடிவு எழுத்ததிகாரத்துட்கூறப்பட்டமையால் இச்சூத்திரத்துக்கு விஷயமாக உரையாசிரியர்சொன்னது பொருத்தமில்லையென்று கருதியுள்ளார். மரூஉவைப்பற்றி எழுத்ததிகாரத்தில் இரண்டுசூத்திரங்கள் உள. அவையாவன :—'முன்னென் கிளவி முன்னர்த் தோன்று, மில்லென் கிளவிமிசை றகர மொற்றல், தொல்லியன் மருங்கின் மரீஇய மரபே' (தொல். எழுத். 355) என்பதும், 'கிளந்த வல்ல செய்யுளுட் டிரிநவும்—வழங்கியன் மருங்கின் மருவொடு திரிநவும்—விளம்பிய் வியற்கையின் வேறுபடத் தோன்றின்—வழங்கியன் மருங்கி னுணர்ந்தன ரொழுக்க—னன்மதி நாட்டத் தென்மனார் புலவர்' (தொல். எழுத். 483) என்பதும். முற்சூத்திரத்தில் 'முன்' என்னுஞ் சொல்லின்முன்னர் 'இல்' என்னுஞ் சொல் வந்தால், இல்லுக்குமேல் றகாவொற்றுத் தோன்றுமென்பதே (முன் + இல் = முன்றில்) உணர்த்தப்பட்டுளது. இல்லும் முன்னும் தொகையாகும்போது தலைதடுமாறி 'முன்றில்' ஆகும் என்று இச்சூத்திரத்திற் சொல்லப்படவில்லை. 'கிளந்த வல்ல செய்யுளுட் டிரிநவும்......' என்னுஞ் சூத்திரத்தில் எழுத்ததிகாரத்தில் முக்கியமாய்க் கூறப்பட்ட புணர்ச்சியிற்சொல்லப்படாதவற்றை ஆராய்ந்துகொள்ளவேண்டும் என்பதே கூறியுள்ளது. இல்லும் முன்னும் தொகைமொழியாகும்போது உண்டாகும் மாறுதல் எழுத்ததிகாரத்துக்கு விஷயம் அல்ல; சொல்லதிகாரத்துக்குத்தான் விஷயம். எச்சவியலில் தொகையைப்பற்றிச் சொல்லும்போதோ சொற்கள் தடுமாறிவருவதைப்பற்றிச் சொல்லவில்லை. ஆகையால் உரையாசிரியர் இலக்கணத்தொடுபொருந்தின மரூஉவழக்கை இச்சூத்திரத்தின்கண் அடக்கினது பொருத்தமென்றே தோன்றுகிறது. ஆனால் 'இனி, சோழநாடு என்பதனைச் சோணாடு என்பது மரூஉவழக்கு. வழக்காறு இத்துணையென்பதில்லை. சிதைந்தும், சிதையாதும் பொருந்திநடப்பனவெல்லாம் அவையெனப்படும் என்றலும் ஒன்று' என்ற வாக்கியம் இளம்பூரணத்தில் உளது. இது முற்கூறப்பட்ட 'கிளந்த வல்ல செய்யுளுட் டிரிநவும்......' என்ற சூத்திரத்துக்கு விஷயமாதலால் இங்குச் சொல்லியிருப்பது பொருத்தமில்லை. ஆனால் மாணாக்கன் படிக்கும்போது இலக்கணத்தொடுபொருந்திய மரூஉவழக்கைத் தவிர வேறு மரூஉவழக்கு உண்டோ என்று ஆசங்கிக்க, ஆசிரியர் மேற்சொன்னவாக்கியத்தைச் சொல்லியிருக்கலாம். அதையும் ஏட்டில்

மாணவன் எழுத, பின்னொருவர் படிக்கும்போது அதுவும் மூலத்தோடு சேர்ந்ததுதான் என்று மயங்கினாரோ என்ற சந்தேகம் உண்டாகிறது.

சேனாவரையத்தில், 'கருமைமுதலாயின ஒருநிகாவண்மையிற் காக்கையொடுசார்த்திக் களம்பழத்தைவிதந்த துணையல்லது.........உரையாசிரியர் பிறர்மதமுணர்த்தியகூறினாரென்பது' என்ற வாக்கியங்கள் உள்ளன. இவ்விஷயத்தை உரையாசிரியர் எங்கு உணர்த்தியுள்ளார் என்பது விளங்கவில்லை.

## பகுதிக்கிளவி.

பகுதிக்கிளவி என்பதற்குப் பக்கச்சொல் என்று உரையாசிரியர் முதலிய மூவரும் பொருள்கொண்டுள்ளார்கள். பகுதி என்பது சார்பு, பாகம் என்னும் பொருளதாதலால், சொல் தனக்கு ஆற்றலாகவுள்ள பொருளை நேரே காட்டாது சார்பானபொருளைக் காட்டுவது என்னலாம். துஞ்சினார் நன்காடு என்பவை முறையே தூங்கினார், நல்லகாடு என்னும் பொருளைச் சொல்லாற்றலாற் குறிப்பினும், வழக்கிற் செத்தார், சுடுகாடு என்று சார்புபொருளைக் கொள்ளுவதும், வெள்யாடு, [1]வெண்களமர் கருங்களமர் முதலியவைகளில் வெண்மை, கருமை முதலியன ஆற்றலானுள்ள தம்பொருளைக்குறிக்காமல் நிற்க, யாடு, களமர் என்பதற்கு உரியபொருளைக் குறிப்பதும் காண்க.

[தொடரும்.]

---

[1]வெண்களமர், கருங்களமர் என்ற சொற்களுக்குப் பொருள் நன்குவிளங்கவில்லை. உழவர், போர்வீரர்களை முறையே அவை குறிப்பனபோலும்.

ஸ்ரீ:

# பரங்கிரிப்பிரபந்தத்திரட்டு.

இது செந்தமிழ்க்கவிஞரும் சிவநேசச்செல்வருமான ஸ்ரீ. மு. ரா. அருணாசலக்கவிராயரவர்களால் இயற்றி வெளியிடப்பெற்றது. இதனுள், பரங்கிரிப்பாமாலை, கலித்துறையந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, வெண்பாவந்தாதி, அலங்காரம், மும்மணிக்கோவை, அநுபூதி, ஐந்திணைக்கோவை என்னும் எட்டுப்பிரபந்தங்கள் அடங்கியிருக்கின்றன. இவற்றினுள்ள செய்யுட்களின் மொத்த எண் ஆயிரத்திருநூற்றெட்டு. அவற்றிற்குச் சிறந்ததொரு குறிப்புரையும் ஆசிரியராலேயே எழுதிச் சேர்க்கப்பெற்றுள்ளது. இது நிற்க.

இந்நூலையும் உரையையும் இயற்றியுதவிய கவிராயரவர்களின் தகுதியை இங்கு விரித்துக்கூறுதல் மிகையாகும். இனியனவாய தமிழ்க் கவிகளை எளிதினில் இயற்றும்வன்மை இவர்களிடம் பிறப்புரிமையாக அமைந்துளது. இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்து நூற்பரிசோதகராக அமர்ந்திருந்து இவர்கள் தமிழ்ப்பணியாற்றிப் புகழ்க்குரிமை பூண்டதும் பலரும் அறிந்ததே. இஞ்ஞான்றும் இவர்கள் மிகத்தளர்ந்த பருவத்திற் சிறிதும் தளராத ஊக்கத்தோடு பழந்தமிழ்நூல்களைப் பரிசோதித்தும் புதியநூல்களைத் தாமே இயற்றியும் வெளிப்படுத்து கின்ற நற்கருமத்தி லீடுபட்டிருப்பது யாவராலும் போற்றுதற்குரியதாம். இவைமட்டுமன்றி இவர்கள் திருப்பரங்கிரியிற் கோயில்கொண்டுள்ள முருகவேளிடத்துப் பெருகிய அன்புடையரென்பதும் இப்பிரபந்தத்திரட்டானே இனிது விளங்குகின்றது. முருகப்பெருமானுடைய திருவருட்பேற்றால் இவர்கள் தம்மையுற்றதோர் உடற்பிணிநீங்கிய நான்முதலங், அத்தலத்தில் வாழ்க்கையையும் அப்பெருமானை

வந்தித்து வழிபடுகையையுமே தமக்குச் சிறந்த பொழுதுபோக்காகக் கடைப்பிடித்து, அதன்பயனாக இதுபொழுது இப்பிரபந்தத்திரட்டையும் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

சொற்பொருள்களின்செறிவும், அணிநலங்களின் அமைதியும், நடையொழுக்கின் இனிமையும் ஆகிய இப்பிரபந்தங்களின் நல்லியல்புகளனைத்தும் ஒருகால் ஊன்றிநோக்குவார்க்கும் எளிதினிற் புலப்படுவனவாகலின், அருங்கலை விநோதருக்கு இவையும் ஓர் அரும்பெறல் விருந்தாமென்பதில் ஐயமில்லை. இவற்றுள்ளும் சிறப்பாகத் திருப்பரங்கிரிக்கோவையின் செய்யுட்டொகுதிகள் செம்பாகமான தன்மையோடு சீரியகருத்துக்களும் வாய்ப்புடையவாகப்பெற்று மிளிர்கின்றன. அன்றியும், அவற்றில் திருக்குறள் முதலிய நீதிநூன்முடிபுகளும், சங்கநூல் வழக்குகளும், சைவசித்தாந்தக்கோட்பாடுகளும் ஆங்காங்குப் பயின்று வருதல் அறிந்து மகிழற்பாலது. இத்தகைய செய்யுணடையைமேற் கொண்டு, நூல்களை முற்றுப்பெற இயற்றவல்லார் இக்காலத்து மிக அரியரென்பதும் சொல்லாமையே அமையும்.

இனி இப்புத்தகம், கல்விகேள்வியுடைய தமிழறிஞர்பொருட்டு வித்தியாதானமாக விநியோகிக்கப்பெறும் நோக்கத்துடன் சொற்பப் பிரதிகளே அச்சிடப்பட்டிருப்பதல்லது, விலைப்பொருட்டால் யாவருக்கும் கொடுக்கப்பெறுவதின்று. இத்தகையகடப்பாட்டாளரான கவிராயரவர்களுக்குத் தமிழுலகியற்றும் கைம்மாறு யாதுளது? இவர்களுக்கு நோயற்ற ஆயுளும் குறையற்ற செல்வமும் வளர்ந்தேறுமாறு முருகப்பிரான் திருவருள்புரிவாராக.

பத்திராதிபர்.

# சிறுபொழுது.

அகப்பொருள்விளக்கநூலாசிரியராகிய நாற்கவிராசநம்பி யென்பவர் "மாலை யாமம் வைகறை யெற்படு, காலை வெம்பகல் காயுநண் பகலெனக், கைவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்" என்றார். தொல்காப்பிய உரையாசிரியர்களுள் இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் "வைகறை விடியல் மருதம்" என்னுஞ் சூத்திரத்திற்கு வைகறையும் விடியலும் எனப் பொருள்கொண்டு சிறுபொழுது ஆறு என்றார்கள். இவ்விருகூற்றுள் எது பொருத்தமுடைத்தென்பதே ஈண்டு நாம் ஆராய்தற்குரியது.

பொருளிலக்கணம் பெரும்பாலும் வழக்கியல்தழுவியேசெய்யப் பட்டதாகலின் அவ்வழக்கியல்கொண்டு இவ்வழக்கறுப்பதே தகுதியாகும். பெரும்பொழுது எப்படி ஆறாகவகுக்கப்பட்டு வழங்கிவருகின்றதோ அப்படியே சிறுபொழுதும் ஆறாகவகுக்கப்பட்டு வழங்கிவருவது யாவரு மறிந்ததொன்றாம். ஓராண்டின் முற்பாதியாகிய உத்தராயணத்தை மூன்றாகவும் பிற்பாதியாகிய தக்கிணாயனத்தை மூன்றாகவும் வகுத்து வழங்குவதுபோலவே, ஒருநாளின் முற்பாதியாகிய பகலை மூன்றாகவும், பிற்பாதியாகிய இரவை மூன்றாகவும் வகுத்து வழங்குவர். பகல் முற்பகல், நடுப்பகல், பிற்பகல் என வகுக்கப்படும். இரவு முதல்யாமம், இடையாமம், கடையாமம் என வகுக்கப்படும். அவ்வாறு வழங்குவதை, "முற்பகற்செய்யிற் பிற்பகல்விளையும்" எனவும் "பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா, பிற்பகற் றாமே வரும்" எனவும், "நடுப்பகல் மத்தியானம்" எனவும், "நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு" எனவும், "இடையிருள் யாமத்திட்டுநீக் கியது" (சிலப்) எனவும், "நடுநாள்யாமம்" (கந்தபு) எனவும், "கடைக்கங்குல்" (பட்டினப்) எனவும் வருவனவற்றான் அறிக. (முதல்யாமம் வந்தவழிக் கண்டுகொள்க).

இதுபற்றியே இளம்பூரணரும், "மாலையாவது இராப்பொழுதின் முற்கூறென்றும், வைகறையாவது இராப்பொழுதின் பிற்கூறென்றும்,

விடியலாவது பகற்பொழுதின் முற்கூறென்றும் எற்பாடாவது பகற் பொழுதின் பிற்கூறென்றும், நண்பகலாவது பகற்பொழுதின் நடுக் கூறென்றும் உரைத்தனர். இன்னுந் தமிழ்நாட்டிலுள்ள கோயில் களிலே பூசைசெய்யுங்காலம் ஆறாக வகுக்கப்பட்டு வழங்குதலானும் அது துணியப்படும்.

இங்ஙனம் வழக்கியலோடொத்துவருதலின் சிறுபொழுதும் ஆறெனக்கொள்ளலே பொருத்தமாம். இச் சிறுபொழுதாறனுள் ஒவ் வொன்றும், ஒருநாளுக்குரிய அறுபதுநாழிகையுள், பப்பத்துநாழிகை யுடையதென்பர் நச்சினார்க்கினியர். அவ்வகுப்பை நாம் உற்றுநோக்கும் போது அது மிகப் பொருத்தமாகவே காணப்படுகின்றது. எனெனின் பகற் பத்துநாழிகைதொடங்கி, இருபதுநாழிகைவரையும் நடுப்பகலும் இரவு பத்துநாழிகைதொடங்கி இருபதுநாழிகைவரையும் இடையாம மும் கொள்ளநிற்றலின்; சிறுபொழு தைந்தெனக்கொள்வார்க்கு இவ்வரை யறை பொருந்தாமையு முணர்ந்துகொள்க.

இன்னும், பத்துநாழிகைக்குப்பின் வெயின்முதிர்தல் அநுபவத் தானும் உணரக்கிடத்தலின் நடுப்பகல் பத்துநாழிகையின்பின் தொடங்கி இருபதுநாழிகைமுடியும்வரையு முள்ளகாலமே என்பது துணிபாதலானும் சிறுபொழு தாறென்றலே பொருத்தமாதல் காண்க.

அற்றேல், தொல்காப்பியத்துள் மருதத்திற்கு விதித்த "வைகறை விடியல்" என்பதை உம்மைத்தொகையாகக்கொள்ளாது பண்புத் தொகையாகக்கொண்டு வைகறையாகியவிடியலென ஒன்றாகக்கொண்டு பொழு தைந்தென்றாலென்னையெனின், அறியாது கடாயினாய்: வைகறை யும் வேறு; விடியலும் வேறு; ஆதலி னிழுக்குண்டு என்பது. வேறு என்பது எற்றாற்பெறுதுமெனின், "வான்கண் விழியா வைகறை யாமத்து (சிலப்பதிகாரம். நாடு—) எனவும், "இரவுத்தலை பெயரா வைகறை யாமத்து" (நற்—௯௭) எனவும், "கடைக்கங்குல்" (பட்டினப் —115) எனவும், "இரவுத்திரெல்லை" (வரி—௧௪—௯) எனவும், "இருள் புலர்காலை" (அகப்பொ) எனவும், வருஞ்செய்யுள்களானே வைகறை வேறென்பதூஉம், "உடைய வாறே நள்ளிரு ளலரி—விரிந்த விடியல் வைகினிர் கழிமின்" (மலைபடுகடாம் ௧௯௫—௬) எனவும், "விடியல்

வெங்கதிர்காயும்" எனவும், "ஆபிடை—வெஞ்சுடர் தோன்றி விடிந்ததை யன்றே" (சிந்தா) எனவும், "வான்கண் விரிந்த விடியல்" மலைபடு(௨௺௭) என்வும் வருஞ் செய்யுள்களானே விடியல் வேறு என்பதூஉம் அறியக் கிடத்தலாற் பெறுதுமென்பது. வைகறை—சூரிய உதயத்துக்கு முந்தியகாலம். விடியல்—சூரியஉதயம்தோட்டுள்ளகாலம். விடியலைத் தொன்னூல்விளக்கநூலாசிரியர் எற்றூேற்றமென்றனர். பரிபாடலி லும் "விடியலங்கியுயர்நிற்க" என்பதறகு, எற்றூேற்றமென்னும் பொரு ளமையச் சிங்காரசியிற் சூரியன் நிற்க எனப் பொருள்கூறுவர் பரிமே லழகரும்.

அற்றேல், "விடியல் வெங்கதிர்" என்பதற்கு, விடியற்பின்னர்த்தா கிய வெங்கதிர் என்று பொருள்கொண்டாலென்னையெனின் அங்ஙனம் நலிந்து பொருள்கோடலாற் போந்தபயனின்றுதலானும், முன்னர்க் காட்டிய "ஆபிடை—வெஞ்சுடர்தோன்றி விடிந்ததையன்றே" என்பது முதலிய செய்யுள்களோடு மாறுபடுதலினுலும், அது பொருந்தாமை தெளியப்படும்.

அற்றேல், குறுந்தொகையினுள், "காலையும் பகலும் கையறு மாலை யும், ஊர்துஞ் சியாமமும் விடியலு மென்று" என விடியலை வைகறை என்றே கூறலின், விடியலை வேறுகக்கோடல் பொருந்ாதன்றூே எனின், இருள்புலருங்காலமாதல்பற்றி வைகறையையும் ஓரோவழி விடியல் என்று கூறுவதன்றி விடியல் வைகறையாகாதென்பது நாம் முன்னர்க் காட்டிய உதாரணங்களா னுணர்ந்துகொள்க.

இன்னும், "பரத்தைவயிற்பிரிந்த தலைவன் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் பொழுதுகழிப்பிப் பிறர்க்குப் புலனுகாமை மீளுங் கால மதுவாதலானும், தலைவிக்குக் கங்குல்யாமங் கழியாது நெஞ் சழிந்து ஆற்றுமைமிகுதலான் ஊடலுணர்த்தற் கெளிதாவதோர் உப காரமுடைத்தாகலானும் வைகறையும், தலைவி விடியற்காலம் சிறுவனைத் தாதலின் இதனுற் பெறும் பயனின்றெனத் தெளிந்து வாயிலடைத்து ஊடல்நீட்டிப்பவே அவ் வைகறைவழித்தோன்றிய விடியற்கண்ணும் அவன் மெய்வேறுபாடு விளங்கக்கண்டு வாயில்புகுத்தல்பயத்தலின் விடியலும் கூறினர்" எனவும் கூறுதலானும் அது பொருந்தாதென்பது.

இன்னும், உரையாசிரியரும், "இனி மருதத்திற்கிடன் பழனஞ் சார்ந்தவிடமாதலான் ஆண்டுறைவார் மேன்மக்களாதலின் அவர் பரத்தைவயிற்பிரிவுழி அம்மனையகத்து உறைந்தமை பிறரறியாமல் மறைத்தல்வேண்டி வைகறைக்கண் தம்மனையகத்துப் பேரும்வழி ஆண்டு மனைவி யூடலுற்றுச் சார்கிலாளாம். ஆதலான் அவை (வைகறையும் விடியலும், அந்நிலத்துக்குச் சிறந்தன" எனக் கூறுதலானும் இரண்டும் வேறெனக் கோடலே பொருத்தமாம்.

அற்றேல், நாள்வெயிற்காலையிற்புணர்தன் முறையன்மையின் ஊடல் செல்லாதன்றோ எனின், இது பரத்தைவயிற் பிரிந்துவந்தமையாலான பெருந்துனியாதலிற் செல்லுமென்பது. இது பெருந்துனியென்பது விளக்குதற்கே நச்சினார்க்கினியரும் 'வாயிலடைத்து ஊடல்நீட்டிப்பவே' எனவும், உரையாசிரியரும் 'ஊடலுற்றுச் சார்கிலாளாம்' என்றுங் கூறியதூஉமென்க. ஆதலின் நாள்வெயிற்காலையாகியவிடியலும் ஊடலுக்கு வேண்டியதொன்றென்பது துணிபேயாமென்க. அற்றேல், கூடலின்றோ வெனின் அவள் ஊடறணிந்து மனமுமொன்றியபின் கூடுவானாதலின் அதன்க ணாராய்ச்சியின்றென்பது.

இன்னும், நச்சினார்க்கினியர், "வீங்குநீர்" என்னும் மருதக்கலியுள்,

"அணைமென்றோள் யாம்வாட வமர்துணைப் புணர்ந்துநீ
மணமனையா யெனவந்த மல்லலின் மாண்பன்றோ
பொதுக்கொண்ட கௌவையிற் பூவணிப் பொலிந்தநின்
வதுவையங் கமழ்நாற்றம் வைகறைப் பெற்றதை"

என மருதத்துக்கு, வைகறைவந்தது என்றும், "விரிகதிர்மண்டிலம்" என்னும் மருதக்கலியுள்,

"தணந்தனை யெனக்கேட்டுத் தவறோரா தெமக்குநின்
குணங்களைப் பாராட்டுந் தோழன்வந் தீயான்கொல்
கணங்குழை நல்லவர் கதுப்பற லணைத்துஞ்சி
யணங்குபோற் கமழுநின் னலர்மார்பு காணிய"

என மருதத்துக் காலைவந்தது, எனவுங் கூறுமாற்றானும், அவ்விரு பொழுதும் பழையகாலத்து நூல்வழக்கின்கண்ணும் அமைந்திருத்தல்

அறியப்படும். பிற்காட்டிய செய்யுளிற் காலை அமைந்தது எப்படி யறியப்படுமெனின், "அணங்குபோற் கமழுநின் னலர்மார்பு காணிய" என்றதனானே விடியற்காலத்துப்பூமுதலிய சூடி அவற்றின் நாற்றச் செவ்விகுலையாமல்வந்தானென்பது பெறப்படுதலின் என்பது. இதனை விளக்குதற்கே நச்சினார்க்கினியரும், மருதக்கலியுரையிலே "இது நாற்றச் செவ்விகுலையாமைவந்தமைகூறலின் மருதத்து விடியற்காலம் கூறிற்று" என்றும், "இதனால் வைகறைக்காலத்து மனைவயிற்செல்லாது இளைய செவ்வியையுடைய பரத்தையரைப் புணர்ந்து விளையாடி அதனினும் அமையாது, பின்னும், அவரைப்புணர்தற்குச் சூழ்ந்து திரிகின்ற இவ்வூரிடத்தே.......எனக் காமக்கிழத்தி உள்ளுறையுவமங்கூறினாள்" என்றும் உரைத்தனர். இன்னும், குறுந்தொகையினுள்வரும்,

"காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்க் கழீஇய சென்ற
மல்ல லூர னெல்லினன் பெரிதென
மறுவருஞ் சிறுவர் தாயே
தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே"

என்னுஞ் செய்யுளும் மருதத்து விடியல்வந்தது. என்னை? தலைவி பெரிதும் விளக்கமுடையன் என அறியக்கிடந்தது விடியலேயாதலின்; 'எல்லினன் பெரி'தென்பது பிறகுறிப்பென்றார் அந்நூலுரையாசிரியர். அதனானு மறிக. அற்றேல், மருதத்துக்கு இருபொழுது கோடன் மிகையன்றோவெனின், முல்லைக்குக் கார்காலம் ஒன்றேகொண்டு ஏனைய வற்றிற்கு இரண்டும் ஆறுங் கோடன் மிகையன்றோவென விடுக்கப்படு மாதலின் அதன்கண் ஆராய்ச்சியின்றென்பது.

அற்றேல், நக்கீரனார் களவியலுரையுள் "வைகறையாமம்" என ஒன்றேகூறியது என்னையோ எனின், அங்ஙனங்கூறியது பரத்தை வயிற்பிரிந்தார் தம்மைப் பிறரறியாமற் றம்மில்லிற்குவருவது பெரும் பாலும் வைகறையேயாதல்பற்றி என்பது. விடியலும் அவர்க் குடன்பா டென்பது, "வைகறைவிடியன் மருதம்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தைப் பிரமாணமாகக்கொண்டமையானே அறியப்படும். 'வை குறுவிடியல்' என்பதைப் பண்புத்தொகையாகக்கொண்டு "வைகறை

யாமம்" என்றுரென்று லென்னை யெனின், அது முன்னர்க்காட்டிய இருவகை வழக்கோடும் மாறுபடுதலின் அவ்வாறு கொள்ளார் என்பது. இனி, 'வைகுறுவிடியல்' என்னும் பாடத்துக்கு, 'வைகுறுவிடியல்' என்பதை வினைத்தொகையாக்கொண்டு, இருள்கழிகின்றவிடியல், (=வைகறை) எனப்பொருள்கொண்டாலென்னையெனின், கலித்தொகைமுதலிய சங்கஇலக்கியங்களில் விடியலும் ஓதப்படுதலின் அவ்வாறு கொள்ளார் என்பது. அன்றியும், ஆசிரியர் 'வைகறை' ஒன்றே கொண்டாராயின் 'வைகுறுவிடியல்' எனக்கூறுது 'வைகுறு'என விளங்கக்கூறுவார்மன், அங்ஙனங் கூறாமையானும் அங்ஙனங்கொள்ளாரென்பது. ஆதலின், பரத்தைவயிற்பிரிந்தார் பெரும்பாலும் மீள்வது வைகறையேயாதல் பற்றி அது கூறினர் என்றலே பொருத்தமாம். இங்ஙனமே எற்பாட்டையும் மாலையுளடக்கினருமுளர்; பொழுதுபடுதலைச்சார்ந்த மாலைக்காலமே மிகுதியும் இரங்கலைத்தருதலின். அங்ஙன மடக்கினமை பின்னர்க் காட்டுதும். மாலை மயங்கிவந்தது என்பர் நச்சினர்க்கினியர். இலக்கியங்களுள், பெரும்பாலும் வருதலின் யாமுரைத்தவாறே கோடலே பொருத்தம்போலும்.

வைகல் என்பது கழிதல் என்னும் பொருட்டு; அது "வைகலும் வைகல் வரக்கண்டும்" என்பதனு லறியப்படும். கழிதல் என்பது முற்றாய் நீங்குதலையுணர்த்தாது; ஆதலின் வைகுறு என்றார். வைகுறு—கழிதலுறுவது; ஆதலின் விடியல் வேறென்பது நன்கு பெறப்படும். நாற்கவிராசநம்பியும் நக்கீரனர்போலவே விடியலையும் வைகறையுளடக்கிக் கூறினரென்றலே பொருத்தமாம்.

இனி எற்பாடு என்பதற்கு ஞாயிறுபடுதலென உரையாசிரியர் யாவருங் கொள்ளவும் சிவஞானமுனிவர் ஞாயிற்றின் உதயம் என்றனர். நாயகரைப்பிரிந்தோர் வருந்துவது இராக்காலமன்றிப் பகற்காலமன்மையானும், பகற்காலங் காமந்தணியுங்காலமன்றி மிகுங்காலமன்றாதலானும், கந்தபுராணத்தில் இந்திராணியினுடைய அணியைக்கண்டு இராக்காலம் முழுதும் வருந்திய இந்திரன் விடிந்தபின் அக்காமந் 'தணிந்தானெனக் கூறப்படுதலானும், இராமபிரானைக்கண்டு காமமுற்ற சூர்ப்பனகையும் அவ்வாறே தணிந்தாளென இராமாவதாரத்திற் கூறப்படுதலானும், நெய்தற்றிணைபாடினரெல்லாம் ஞாயிறுபடுங்காலமாகவே வைத்துப்

பாடியிருத்தலானும், ஞாயிறுபடுதல்கண்டு இரங்கிய தலைவி தோழி முதலியோராற்ற ஆறியிருக்கும் மாலைக்காலத்துக்குமுன்னர் இரங்குதற்குரியகாலங் கூறுதலே முறைபாதலானும் ஞாயிறுபடுதலென்பதே பொருத்தமாகவும், உதயமென்று முனிவர்கூறியகருத்து யாதோ அறியேம். உதயமேயெனில் தொல்காப்பியர் வெய்யோன்தோற்றமென விளங்கக்கூறுவாராதலானும் ஞாயிறுபடுதலென்பதே பொருத்தமாம்.

இன்னும், "எற்படு பொழுதி னிளநிலா முன்றில்" எனவும், "படுங்கதி ரமயம் பார்த்திருந் தோர்க்கு" எனவும், சிலப்பதிகாரம் கூறுமாற்றானும், எற்பாடு—ஞாயிறுபடுதல் என்பது அறியப்படும்.

அற்றேல், "காலையும் பகலும் கையறு மாலையும்-ஊர்துஞ்சி யாமமும் விடியலும்" எனக் கூறியபொழுதினுள் எற்பாடு கூறப்பட்டிலதேயெனின் விடியலை வைகறையுளடக்கி நக்கீரனார் கூறியவாறுபோல எற்பாட்டை மாலையுள் அடக்கிக்கூறினாரென வுணர்க. அங்ஙனமே சிலப்பதிகாரக் காரரும், "வையமோ கண்புதைக்க வந்தாய் மருண்மாலை" என மாலையுளடக்கிக்கூறுமாற்றானும் அறியப்படும். இதுபற்றியே சிலப்பதிகார உரையாசிரியரும், நெய்தற்குச் சிறுபொழுது எற்பாடு எனக்கூறி இவ்வடியை உதாரணமாகக் காட்டினர்.

இன்னும், நச்சினார்க்கினியர், இனி வெஞ்சுடர்வெப்பந் தீரத் தண்ணறுஞ்சோலைதாழ்ந்து நீழற்செய்யவுந் தண்பதம்பட்ட தெண்கழி மேய்ந்து பல்வேறுவகைப்பட்ட புள்ளெல்லாங் குடம்பைநோக்கி உடங்குபெயரவும், புன்னைமுதலிய பூவினாற்றம் முன்னின்று களூற்றவும், நெடுந்திரையுழுவத்து நிலாக்கதிர்பரப்பவுங் காதல்கைம்மிக்குக் கடற்கானும் கானற்கானும் நிறைகடந்து வேட்கைபுலப்பட உரைத்தலின், ஆண்டுக் காமக்குறிப்பு வெளிப்பட்டு இரங்கற்பொருள் சிறத்தலின் எற்பாடு நெய்தற்குவந்தது எனக் கூறியகருத்திற்கேற்ப முறையே நற்றிணையினும், அகநானூற்றினும்,—

"பெருங்கடன் முழங்கக் கானன் மலர
இருங்கழி யோத மில்லிறந்து மலிர
வள்ளிதழ் நெய்தல் கூம்பப் புள்ளுடன்

கமழ்பூம் பொதும்பர்க் கட்சி சேரச்
செல்சுடர் மழுங்கச் சிவந்துவாங்கு மண்டிலம்
கல்சேர்பு நண்ணிப் படரடைபு நடுங்கப்
புலம்பொடு வந்த புன்கண்மாலை
யன்ன ரூன்னூர் கழியிற் பன்னாள்
வாழலேன் வாழி தோழி யென்கட்
பிணிபிறி தாகக் கூறுவர்
பழிபிறி தாகல் பண்புமா ரன்றே" (நற்.–கஎ.)

"நெடுவெண் மார்பி லாரம் போலச்
செவ்வாய் வானந் தீண்டி மீனருந்து
பைங்காற் கொக்கின் னிரைபறை யுகப்ப
வெல்லை பைப்பயக் கழிப்பிக் குடவயிற்
கல்சேர்ந் தன்றே பல்கதிர் ஞாயிறு
மதரெழின் மழைக்கண் கலுழ விவளே
பெருநா ணணிந்த சிறுமென் சாயன்
மாணலஞ் சிதைய வேங்கி யானு
தழூஉறொடங் கினளே பெரும வதனாற்
கழிச்சுறு வெறிந்த புட்டா ளத்திரி
நெடுநீ ரிருங்கழிப் பரிமெலிந் தசைஇ
வல்வில் லிளையரோ டெல்லிச் செல்லாது
சேர்ந்தனை செலினே சிதைகுவ துண்டோ
பெண்ணை யோங்கிய வெண்மணற் படப்பை
யன்றி லகவு மாங்கட்
சிறுகுரா னெய்தலெம் பெருங்கழி நாட்டே." (அக.–கஉ0.)

எனக் கூறப்படுதலானும், அவர்கருத்தே ஈண்டுப் பொருத்தமாதல் காண்க.

இன்னும், நற்றிணையுள்ளும்,

"ஞாயிறு ஞான்று கதிர்மழுங் கின்றே
யெல்லியும், பூவீ கொடியிற் புலம்படைந் தன்றே
வாவலும் வயின்றொறும் பறக்குஞ் சேவலு

நகைவாய்க் கொளீஇ நகுதொறும் விளிக்கு
மாயாக் காதலொ டதர்ப்படத் தெளித்தோர்
கூறிய பருவங் கழிந்தன்று பாரிய
பாரரை வேம்பின் படுசினை யிருந்த
குராஅற் கூகையு மிராஅ விசைக்கு
மாணு நோயட வருந்தி யின்னுந்
தமியேன் கேட்குவன் கொல்லோ
பரியரைப் பெண்ணை யன்றிற் குரலே''

என எற்பாடுவருதலும், பிற பழந்தமிழ்நூல்களிலும் இவ்வாறு வருதலும் நோக்குக. இன்னும், எற்பாடு ஞாயிறுபடுதலென்னுங்கருத்துறவே "கதிரு மெலிந்து கருங்கடல் வீழ்ந்தது" என அன்பிணைந்திணையிபற்றிஞரும் நங்கருத்தோடொப்பக் கூறல் காண்க. (செந்தமிழ உரு-ம் தொகுதி பக்கம்—உஎஅ.)

இன்னும், இவ்வறுவகைப்பொழுதும் ஐவகைநிலத்திற்கும் உரிப்பொருள்பற்றியன்றி, அவ்வந்நிலத்துமக்களின் தொழில்நிகழ்ச்சிபற்றியும் உரியவாதல் காட்டுதும். முல்லைநிலத்து ஆயர்கள் பகலில் மேய்த்த ஆநிரைகளையும் பிறநிரைகளையும் கொண்டுவந்து தொழுவங்களிற் சேர்த்துப் பின் பால்கறத்தன்முதலிய தொழில்களையுஞ் செய்து தத்தமில்லிற்கு மீளுங்காலம் ஞாயிறுபட்ட மாலையேயாதலானும், "குறிஞ்சிநிலத்து வேட்டுவரும் தெய்வவணக்கம் வெறியாடன்முதலிய சில தொழில்களைச் செய்யுங்காலம் இடையாமம் ஆகலானும், பாலைநிலத்து எயினரும் வழிச்சென்று வெயின்மிகுதிநோக்கி மாநீழல்களில் ஒதுங்கியிருப்போரை ஆறலைக்குங்காலம் நடுப்பகலேயாதலானும், நெய்தனிலத்துப் பரதவரும் மீன்பிடித்தல், உப்புவிளைத்தல், அவைவிற்றன்முதலிய தொழில்களைப் பெரும்பாலும் செய்யுங்காலம் வெயில் வெப்பங் குறையுங்காலமாகிய எற்பாடேயாதலானும் அறுவகைச்சிறு

பொழுதும் தொழில்பற்றியும் அவ்வந்நிலத்துக்குரியவாதல் காண்க. ஆயர்கள் தந்தொழில்செய்து மீளுங்காலம் மாலை என்பதை,

தலையிறும்பு கதழு நாறுகொடிப் புறவின்
வேறுபுலம் படர்ந்த வேறுடை யினத்த
வளையான் றீம்பான் மிளைசூழ் கோவலர்
வளையோ ருவப்பத் தருவனர் சொரிதலிற்
பலம்பெறு நசையொடு பதிவயிற் றீர்ந்தநும்
புலம்புசே ணகலப் புதுவி ராகுவிர்
பகர்விரவு நெல்லின் பலவரி யன்ன
தகர்விரவு துருவை வெள்ளையொடு விரைஇக்
கல்லென் கடத்திடைக் கல்லி னிரைக்கும்
பல்யாட் டினநிரை யெல்லினிர் புகினே
பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவிர்"

(மலைபடுகடாம் ௪0௭—௧௭)

என்பதனானும், குறிஞ்சிநிலத்து வேட்டுவர், தெய்வவணக்கம், வெறியாடன் முதலியன செய்யுங்காலம் இடையாமம் என்பதனை, "அணங்குடை நெடுவரை" என்னும் அகப்பாட்டினுள்,

"களனன் கிழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்
துருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த வுருகெழு நடுநாள்"

என்பதனானும், உழவர்கள் வைகறையிற் றுயிலெழுந்து சென்று வயல்களிற் றொழில்செய்து மீளுங்காலம் விடியல் என்பதை,

"மலைகண் டன்ன நிலைபுணர் நிவப்பிற்
பெருநெற் பல்கூட் டெருமை யுழவ

கண்படை பெறாது தண்புலர் விடியற்
கருங்கண் வராஅற் பெருந்தடி மிளிர்வையொடு
புகர்வை யரிசிப் பொம்மற் பெருஞ்சோறு
கவர்படு கையை கழும மாந்தி
நீருறு செறுவி னுறுமுடி யழுந்தநின்
னடுந ரோடுசேறி யாயின்வண்
சாயு நெய்தலு மோம்பு மதி" (நற்றிணை-சூ0)

என்பதனானும்,

"துளங்குதசும்பு வாக்கும் பசும்பொதித் தேறல்
இளங்கதிர் ஞாயிற்றுக் களங்கடொறும் பெறுகுவிர்"

(மலைபடுகடாம்-சசுச—டு)

என்பதனானும், எயினர்கள் வழிச்செல்வோரை யாறலைப்பது நடுப்பக லென்பதை,—"வானம் பெயல்வளக் கரப்ப" என்னும் அகப்பாட்டி னுள்,

"நிறைவன விமைக்கு நிரம்பா நீளிடை
யெருவை யிருஞ்சிறை யீரீஇய விரியிணர்
தாதுண் டும்பி முரலிசை கடுப்பப்
பரியின துயிர்க்கு மம்பினர் வெருவர
வுவலை சூடிய தலையர் கவலை
யார்த்துட னரும்பொருள் வவ்வலின் யாவதுஞ்
சாத்திடை வழங்காச் சேட்சிமை யதர
சிறியிலை நெல்லித் தீஞ்சுவைத் திரள்கா
யுதிர்வன தாஅ மத்தந் தவிர்வின்று
புள்ளி யம்பிணை யுணீய வுள்ளி
யிறுமருப் பொழித்த தலைப தோல்பொதி

மறுமருப் பிளங்கோ டதிரக் கூடஞ்
சுடர்தெற வருந்திய வருஞ்சுர மிறந்தாங்கு" (உகூக)

என்பதனானும், ('சுடர்தெற' என்றதனால் நடுப்பகல் பெறப்படும்.) பரதவர் மீன்வேட்டையாடற்குரியகாலம் பெரும்பாலும் எற்பாடென்பதை,

"நெடுங்கயிறு வலந்த குறுங்க ணவ்வலைக்
கடல்பா டழிய வினமீன் முகந்து
துணைபுண ருவகையர் பரத மாக்க
ளிளையரு முதியருங் கிளையுடன் றுவன்றி
யுப்போ யுமண ரருந்துறை போக்கு
மொழுகை நோன்பக டொப்பக் குழீஇ
யயிர்திணி யடைகரை யொலிப்ப வாங்கிப்
பெருங்களந் தொகுத்த வுழவர் போல
விரந்தோர் வறுங்கல மல்க வீசிப்
பாடுபல வமைத்துக் கொள்ளை சாற்றிக்
கோடுயர் திணிமணற் றுஞ்சுந் துறை" (அகம்—௩0.)

என்பதனானும்,

"நெடுங்கட லலைத்த கொடுந்திமிற் பரதவர்
கொழுமீன் கொள்கை யழிமணற் குவைஇ
மீனெய் யட்டிக் கிளிஞ்சிலிற் பொத்திய
சிறுதீ விளக்கிற் றுஞ்சு நறுமலர்ப்
புன்னை யோங்கிய துறைவன்" (நற்றிணை—௧௭௫)

என்பதனானும் அறிந்து கொள்க.

இங்ஙனம்,

சி. கணேசையர்.

---

ஸ்ரீ:

# மதிப்புரை.

—K(o)K—

சென்னைச் சர்வகலாசாலைத் தமிழ்ப்பேரகராதி:—இவ்வகராதியின் ஏழாவதுசஞ்சிகை இப்பொழுது வெளிவந்திருக்கிறது. இரண்டாந் தொகுதியின் நாலாம்பகுதியும், மூன்றாந்தொகுதியின் முதற்பகுதியும் இதில் அடங்கியுள்ளன. 'ந' வர்க்கத்தோடு இரண்டாந்தொகுதி முற்றுப்பெற்று மூன்றாந்தொகுதியிற் 'ச' வர்க்கம் தொடங்கப் பெற்றிருக்கிறது. சுமார் 160 பக்கங்களளவுள்ள இந்தச்சஞ்சிகையின் விலை ரூபா 2. வழக்கம்போலவே இவ்வகராதிவேலை திருப்திகரமாக நடந்துவருதல் மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது.

திவ்யப்ரபந்த திவ்யார்த்ததீபிகை:—இது, ஸ்ரீவைஷ்ணவர்களால் திராவிடவேதமென்று போற்றப்படுகிற திவ்யப்ரபந்தங்களின் தமிழுரையாகும், இவ்வுரை, காஞ்சீபுரம் பிரதிவாதிபயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசார்யஸ்வாமிகளால் எழுதப்பட்டு, மாதாந்தசஞ்சிகைகளாக நெடுங்காலமாய் வெளிபிடப்பட்டுவருகிறது. இதுவரைமுதலாயிரம் முழுவதும், இயற்பாவில் திருமங்கையாழ்வார்பிரபந்தங்களும், முற்றுப் பெற்றுவிட்டன. இப்பொழுது இயற்பாவில் நம்மாழ்வார் பிரபந்தங்களும் திருமங்கையாழ்வார் அருளிய பெரியதிருமொழியும் உரையுடன் ஒவ்வொருசஞ்சிகையிலும் மாறிமாறி வந்துகொண்டிருக்கின்றன. இப்பிரபந்தங்களுக்கெல்லாம் பூர்வாசாரியர்கள் திருவாய்மலர்ந்தருளிய மணிப்ரவாளவ்யாக்யானங்கள் மிகச் சிறந்தனவாயிருப்பினும், அவை எல்லோர்க்கும் எளிதிற் பொருள்விளங்கும்நிலையி லில்லை. ஆகையால், அவ்வியாக்யானங்களை அடியொற்றி மிகத்தெளிவான செந்தமிழ்நடையில் எழுதப்பட்ட இவ்வுரை பொதுவாகத் தமிழ்மக்களெல்லோருக்குமே சிறந்தபயனைத் தருமென்பதில் ஐயமில்லை. இதனை எழுதுவதில் இவ்வுரையாசிரியருக்குள்ள ஊக்கமும் உழைப்பும் விடாமுயற்சியும் பாராட்டத்தக்கன. பொருண்முட்டுப்பாட்டினால் இந்நன்முயற்சி சிறிதும் தடையுறாவண்ணம், சென்னையிலுள்ள பிரபலவர்த்தகரும் பரோபகாரப்பெருந்தகையாளருமான ஸ்ரீவைஷ்ணவாத்மம் ஸ்ரீமான். M. R. கோவிந்தசாமிநாயுடு அவர்கள் பேருதவிபுரிந்துவருவது

மிகவும் நன்குமதிக்கற்பாலதாம். இந்த தீபிகையின் சஞ்சிகைகள் நல்லகாகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டு, ஒவ்வொருமாதமும் குறித்த காலத்தில் தவறாமல் வெளிவருமென்று தெரிகின்றது. இதன் வருடச் சந்தா ரூபாய் 3-0-0; வெளிநாடுகளுக்கு ரூ. 3-8-0. வேண்டுவோர், 'M. R. கோவிந்தசாமிநாயுடு, திவ்யப்ரபந்த திவ்யார்த்ததீபிகை ஆபீஸ், 32 பந்தர் தெரு, G. T. மதராஸ்' என்ற விலாசத்திற்கு எழுதிப் பெறலாம்.

இராமாநுஜநூற்றந்தாதி (உரையுடன்):—இதுவும் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியஸ்வாமிகளாலேயே எழுதப்பெற்ற 'திவ்யார்த்த தீபிகை' யென்னுந் தெளிவுரையோடு தனிப்புத்தகமாக அச்சிடப் பட்டுள்ளது. விலை ரூ. 1-0-0.

ஸ்ரீமுகுந்தமாலை:—ஸ்ரீகுலசேகராழ்வாரருளிச்செய்ததாக வழங்கப்பெறும் இந்நூல் வடமொழியில், சுலோகரூபமாக அமைந்தது. இதற்குத் தெளிவான பதவுரையும் கருத்துரையும் தமிழ்மொழியில் ஷை ஆசார்யஸ்வாமிகளே எழுதியுள்ளார்கள். இந்நூலுக்குப் பிறர் இயற்றியவுரைகளிலெல்லாம் இது மிகச் சிறந்ததென்பது சொல்லாமலே விளங்கும். இதன் விலை அணா 8.

நமஸ்காரதத்வம்:—இதுவும் ஷைஸ்வாமிகளால், தமிழ்வசனநடையில் எழுதப்பட்டதொரு சிறு புத்தகமாகும். இதில் நமஸ்காரம் செய்யும் முறைகளைப்பற்றி ஸ்ரீவைஷ்ணவசமயத்தின் ஸத்ஸம்ப்ரதாய அர்த்தங்கள் நன்கு வெளியிடப்படுகின்றன. இவை மூன்று புத்தகங்களையும் தனித்தனியே வேண்டுகின்றவர்களும் ஷை M. R. கோவிந்தசாமிநாயுடு அவர்கள் விலாசத்திற்கே எழுதிப் பெறலாம்.

திருவேள்ளூர்ப்புராணம்:—இது, வடகொங்குநாட்டிற் 'பேளூர்' என்ற பெயரால் வழங்கும் சிவதலத்தின் மாண்புகளைச் செய்யுள்நடையாற் கூறுவது. இதனை இயற்றியவர் சுத்தசைவராகிய அட்டாவதானம் சோக்கலிங்கப்புலவராவர். வரகவி, ஸ்ரீமான் திரு. அ. சுப்பிரமணியபாரதியவர்களாற் பரிசோதிக்கப்பெற்று, குறிச்சி ஸ்ரீமாந், அ. சிதம்பரவுடையாரவர்களால் இது பதிப்பிக்கப்பட்டது. சேலம் ஸ்ரீமாந். பட்டக்கார் S. M. நாராயணசாமிபிள்ளையவர்கள் இதற்கு ஆராய்ச்சிமுறையான முகவுரையொன்று எழுதியிருக்கின்றனர். இதன்

செய்யுட்கள் எளிதிற் பொருள்விளங்குவனவேயாயினும், மிகத் தெளிவான பொழிப்புரையும் இதில் ஆங்காங்கு எழுதிச் சேர்க்கப்பெற்றுள்ளது. சிவபக்தியும் செந்தமிழபிமானமும் உடையவர்கள் மற்றைத் தலபுராணங்களைப்போலவே இதனையும் ஆதரவோடு போற்றிக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறது. இதன்விலை ரூபா. 1--4--0. வேண்டுவோர் சேலம் பட்டக்கார் அச்சியந்திரசாலையின் சொந்தக்காரரான ஸ்ரீமாந் S. M. நாராயணசாமிபிள்ளையவர்களிடம் பெறலாம்.

சுத்த சாதகம்:—இது குமாரதேவவள்ளலார் என்னும் சைவப் பெரியாராற் செய்யுள்வடிவமாக அருளிச்செய்யப்பட்டது. சைவசமயக் கோட்பாடுகளோடு பொருந்த உண்மைமுத்திநிலையையும், அதனையடைதற்கேற்ற சாதகங்களையும் இது விளங்கக்கூறுகின்றது. 'புதுவை நந்திவெளியீட்டுமன்ற'த்தவராற் பதிப்பிக்கப்பெற்ற இப்புத்தகத்தில், 'உண்மை முத்திநிலை' என்னும் ஓர் அரியகட்டுரையும், யாழ்ப்பாணம் தென்கோவை ச, கந்தையபிள்ளையவர்களால் வசனநடையில் எழுதிச் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது. உண்மைச்சைவர் ஒவ்வொருவரும் படித்துப் பயனடையுமாறு இதன் பிரதி ஒவ்வொன்று 2 அணாவாகக் குறைந்தவிலைக்குக் கொடுக்கப்படுகிறது. வேண்டுவோர் 'நந்தி பப்ளிஷிங் ஹௌஸ்; 4, அம்பலத்தாடையார் வீதி, புதுச்சேரி' என்ற விலாசத்திற் பெறுக

ஸ்ரீராமதூதன்:—இது, மாயவரம் முனிசிபல் ஹைஸ்கூல் தமிழாசிரியர் மகா-௱-௱-ஸ்ரீ கி. கோபால்கிருஷ்ணையரவர்களால் எழுதிப் பிரசுரிக்கப்பட்டது; வானரவீரனாகிய மாருதியின்சரிதத்தை இனிய தமிழ்நடையில் எடுத்துரைப்பது; மாணவர்களுக்குப் பயனளிக்கவல்லது; துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றது. ஆகையால் நடுத்தரவகுப்புகளிற் பாடமாகவைக்கும் தகுதியுடையதே. இதன் விலை அணா 6. வேண்டுவோர் ஆசிரியரவர்களிடம் பெறலாம்.

மணித்திரள்:—இதுவும் ஷை ஐயரவர்களாலேயே வெளியிடப்பெற்றது. நம் பரதநாட்டிற் பெருமையுற்று விளங்கிய முன்னோரது சரித்திரங்கள் சில இதில் அடங்கியுள்ளன. ஈசுரபக்தி, பரோபகாரம், பொறுமை, வீரம் முதலிய அருங்குணங்கள் பள்ளிச்சிறுர்க்கும் உள்ளத்திற் பதியவேண்டும் என்ற நோக்கத்துடன் ஆசிரியர் இதனை எழுதி

யிருப்பதாகத்தெரிகிறது. இதுவும் துரைத்தனத்தார் அங்கீகரித்ததே. விலை அணு 6 : ஷை ஆசிரியரிடமே இதனையும் பெற்றுக்கொள்ளலாம்.

கோபாலன்:—இது பூ. மு. முருகேசமுதலியாரவர்களா லெழுதி 'ஸி. குமாரஸாமிநாயுடு ஸன்'ஸால் வெளியிடப்பெற்றது; ஸ்ரீமாந். S. அநவரதவிநாயகம்பிள்ளை B.A., L.T., அவர்களுடைய முகவுரை கொண்டது; கண்ணபிரானுடைய சரித்திரப்பகுதிகளை இளஞ்சிறுர்களுக்கு ஏற்றவாறு எளிய தமிழ்நடையில் இனிமையாகக் கூறுவது. கீழ்த்தரவகுப்புமாணவர்க்குரிய பாடப்புத்தகங்களில் இது முதன்மையாகநிற்கத்தகுந்தது. தடித்த எழுத்தில், பல சித்திரப்படங்களோடு மிகவும் அழகாக அச்சிடப்பட்டிருக்கும் இப்புத்தகத்தின் விலை அணு 6. வேண்டுவோர் சென்னை 'ஸி, குமாரசாமிநாயுடு ஸன்'ஸிடம் பெறலாம்.

விபவ வருஷ வாக்கிய சைவப்பஞ்சாங்கம்:—இது, சோதிட வித்வானும் தமிழாசிரியருமான ஸ்ரீமாந். இ. மு. சுப்பிரமணியபிள்ளையவர்களால் ஆகமமுறையாகக் கணிக்கப்பட்டதாகும். இதில், ஸ்மார்த்த வைணவ, கிறிஸ்தவ, மகமதிய விசேடங்களும், முகூர்த்தநிர்ணயம் முதலிய பல அரிய பொதுவிடயங்களும் அடங்கியுள்ளன. ஆகையால் இது சைவர்களும் ஏனையோரும் அபிமானித்து ஆதரித்தற்குரியது. இதன் விலை கிளேஸ் 2 அணு; ரப் $1\frac{1}{2}$ அணு. திருநெல்வேலியிலும் சென்னையிலுமுள்ள சைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகத்திலும் மற்றும் பலவிடங்களிலுள்ள புத்தகக்கடைகளிலும் விலைக்குக் கிடைக்கும்.

தமிழ்மகள்:—ஆசிரியை ஸ்ரீமதி மா. மங்களம்மாளவர்களால் நடத்தப்பெறும் ஓர் அரிய மாதாந்தப்பத்திரிகையாகிய இது, நம் தமிழ்நாட்டின் பெண்பாலரது அறிவுவளர்ச்சியின்பொருட்டு, சென்ற மூன்று வருடகாலங்களுக்குமேலாக முயற்சியுடன் உழைத்து நல்லபலனை அளித்திருக்கின்றது. ஆண் பெண் இருபாலாரும் அறியவேண்டிய அரியவிஷயங்கள் பல இதிலடங்கியுள்ளனவாகையால் தமிழ்மக்களது முன்னேற்றத்திற்கு இதனை ஓர் இன்றியமையாதசாதனமென்று சொல்லலாம். மேன்மேலும் இப்பத்திரிகை நன்னிலையெய்துமாறு வேண்டப்படுகிறது. இதன் வருடச்சந்தா ரூபா 5. தனிப்பிரதி விலை அணு 8. வேண்டுவோர், 'மானேஜர், தமிழ்மகள், வேப்பேரி, மதராஸ்' என்ற விலாசத்திற்கு எழுதிப் பெறுக.

ஸ்ரீ:

# குருபரம்பரை.

## ஆளவந்தார்வைபவம்.

[௩௨-ஆம் பக்கத்தொடர்ச்சி]

### நாதமுனிகள் இசைத்திறந்தெரித்தது.

அலகிலாதபாகவதாருளிச்செய்யவக்கானம்
உலகமெங்கும்பரந்தோங்கியும்பர்மகிழுந்தாத்தோடுஞ்
சிலகாலங்கள்போயபினத்தேயமாளுமன்னவன்முன்
இலவத்துவர்வாய்த்துடியிடையாரிருவர்வாதிட்டேறினரால். (௭0)

மன்னன்வாதேதெனமொழியமனிதர்கானம்வருமெனக்கிம்
மின்னாட்குவிண்ணவர்கள்கானம்வருமிங்கெதற்குவீ
றென்னநோக்கவேண்டுமெனவிசைத்தாளொருத்திமற்றவளும்
அன்னதேயாமெனகானந்தெய்வகானமறியென்ன. (௭௧)

பாடினாரவ்விருவோரும்பாராண்மன்னனுடன்செறிந்து
மாடுநின்றமந்திரிமார்மறையோர்வணிகர்வேளாளர்
நாடினார்களிருவர்பயிலுதகீதந்தனைநாடி
ஏடமனிதர்கானத்துக்கிணையேதெய்வகானமென. (௭௨)

தெய்வகானம்வல்லவளைச்சிறிமனிதர்கானத்தி
னையும்மனம்வைத்தவைவல்லாடனக்குநாடாண்மன்னவனும்
செய்யவாடையானைகலனளிப்பத்தெய்வகானம்வல்லாள்
வையமறியாவென்கானம்வானோறிவளெனப்போந்தே. (௭௩)

திருப்பதிதோறுஞ்சென்றுசிறந்தவக்கானம்பாடி
விருப்பொடுதிரிவாளோர்நாள்வீரநாராயணத்தில்
அருட்கடன்முன்னேநின்றுமறைந்தனளதுகேட்டந்த
மருப்பொலிகுழலினளைவானவர்கானம்வல்லார். (௭௪)

உன்னையொத்தார்களிந்தவுலகிடையொருவரில்லை
என்னவன்றுரைத்தநாதமுனிவனையிறைஞ்சிமீண்டம்
மன்னவன்முன்னேசென்றுமற்றென்பாட்டறியவல்லார்
மின்னவிர்மவுலிவேந்தேவீரநாராயணத்தில். (௭௫)

ஒருவருண்டவரைக்கூவியுன்முனேயிருத்திற்பின்னை
யிருவரும்பாடித்தோற்றாலெடுக்கிலனாதவீணை
செருமலிதோளாயென்னத்தெய்வகானத்தாள்செப்பப்
பொருவறவுலகங்காக்கும்பூபதியதனுக்கொத்தே. (௭௬)

அப்பொழுதேவீரநாராயணத்திலமர்ந்தருளும்
ஒப்பரியான்றனைக்கொணர்கதூதரெனவுரைத்தரசன்
செப்பமிகுமாளோலைசெலவிட்டானாதமுனி
இப்படியிற்றெய்வகானத்தியற்கையெழில்முழுதும். (௭௭)

காட்டவேண்டுமெனக்கருதிக்கணிப்பிலாதபாகவதர்
கூட்டமிக்கதமர்களொடுங்குலவுசிவிகைமீதேறி
யோட்டரோடும்புகவாசனுபசாரங்கள்பலசெய்து
பாட்டிற்பிணங்குமடந்தையரையழைத்துப்பத்தன்றிருமுன்னே. (௭௮)

தோன்றநிறுத்திமுனிவனெடுஞ்சொல்வான்மற்றித்தோகையர்கள்
மூன்றுவிதத்தினுறுந்தமிழ்கண்முழுதுமோதிவாதுக்கிங்
கான்றவறிவின்மிக்கவரேயணைந்தார்நீரித்தமிழிசையை
யூன்றிக்கேட்டுநலத்தீங்கையுரைப்பீரென்றானுலகாள்வான். (௭௯)

நன்றென்றவரைநாதமுனிநாதகீதம்வல்லவரே
நின்றுபாடுமினென்றானேர்ந்தவிடையாரிருவோரும்
வென்றிவேந்தனுடனிருந்துவேதநான்கும்விரித்தவரை
இன்றுகேளுமெனக்கூறிப்பாடினார்களினியவிசை. (௮௰)

வாரையறுக்குங்கனதனத்தார்வதனநோக்கிநாதமுனி
பூரைநினைமினெனக்கூறிப்பூமிபாலன்முகநோக்கிச்
சீரைநிறுத்தவியவிசையிற்றெய்வகானமிவள்பாட்டுப்
பாரைமுழுதுமாண்டவப்பாவைகானம்மானிடமாம். (௮௧)

மண்ணவர்கானமேயிம்மானிடரறிவர்மற்ற
விண்ணவர்கானமந்தவிண்ணவரறிவதல்லாற்
பண்ணமர்கலைகள்வல்லாய்பாருளோரறியாரென்றான்
உண்ணெகுகருணையும்பனெங்குலகாளுமன்னன். (௮௨)

அத்திறமாகிற்றெய்வகானநீரறிந்தவாறிங்
கெத்திறமியற்கைதன்னிலெமக்கறிவிப்பீரென்னப்
பத்தர்கட்கினியவன்பர்பலபலநூறுதாள
மொத்துமினுடனேயென்றவ்வோசைகண்டிசைகள்கூற. (௮௩)

வேறுவேறத்தாளங்கள்வேந்தனுநிறுத்துநோக்கிக்
கூறுமோர்மாகாணிக்குமேறுதல்குறைதலின்றி
மாறறநோக்கிச்சொன்னமறையவன்கழலில்வைத்தங்
கேறுபொற்சிவிகையாதியெல்லையறுவளங்களீந்தான். (௮௪)

நாதமுனியிவையெல்லாநரபாலவெமக்காகா
வோதருஞ்சீர்வீரநாராயணத்திலுற்றுறையும்
மாதவனும்மன்னனூர்தமக்கிதனைவரவிடென
வேதமிறைத்தெடுத்தேத்தவீரநாராயணத்தில். (௮௫)

வந்திருந்து தமிழ்மாறன்வடிவெழுதும்படியெடுப்பைச்
சிந்தையுறப்பதிவித்துமன்னனூர்திருவடிக்கீழ்
அந்தமிலாவாநந்தவருள்வாரிவீற்றிருந்தான்
இந்தவகையன்றியின்னுமிவன்செயல்களிசைக்கின்றேன். (௮௬)

[நாதமுனிகள் தம்மை ஆசரித்தோர்க்கு உபதேசித்து
யோகத்தமர்ந்து வீடுபெற்றது.]

இப்படிசிலநாள்செல்லவிவர்திருவடியில்வந்தங்
கொப்பருமுய்யக்கொண்டாரோங்குசீர்க்குருகைகாவ
லப்பன்மற்றதற்பினம்பிகருணாகரதாசரன்றிச்
செப்பருமிக்கவேறுதிருவுடையாரோடெங்கும். (௮௭)

சீர்கொண்டதிருக்கண்ணமங்கையாண்டான்
சிறந்தவருள்வானவன்மாதேவியாண்டான்
பேர்கொண்டவுருப்புட்டூரசான்பிள்ளை
பீடுடையசோகத்தூராழ்வாராதி
யேர்கொண்டநாதமுனிசரணென்றேத்தி
யிவரெண்மராசரித்தாரிவர்கட்காங்கே
பார்கொண்டவியலிசையிலாழ்வார்சொன்ன
பனுவலொடுசாத்திரங்கள்படிப்பித்தன்பால். (௮௮)

எண்ணருஞ்சீர்யோகரகசியமுமிக்க
வெழில்விளங்குஞானதத்துவமதென்னு
நண்ணரியபிரபந்தமிரண்டுங்கூறி
ஞானயோகத்திருந்தானால்வேதஞ்சொல்
புண்ணியத்தின்கொழுந்தென்னப்புவிமேற்போந்த
பொருவருஞ்சீர்நாதமுனிபோதந்தன்னா
லுண்ணெகிழும்யோகத்தினிருப்பைக்கண்டா
ரொருமுதலோவிவனென்னவுருகியேத்த. (அகூ)

சிலபகல்செல்லுநாளிற்றெரிவையரோடுங்கூடி
யுலகமாள்கின்றமன்னனுத்தமர்யோகந்தன்னின்
மலமறவிருத்தல்கேட்டுமன்னனார்தம்மையந்த
அலகிலாவருளினானையடிதொழவேண்டுமென்ன. (கூ0)

வந்துமாமாயன்செய்யமலரடியிறைஞ்சியேத்தி
யெந்தையார்யோகந்தன்னிலிருந்தமாளிகையிலெய்திச்
சிந்தைபால்வணங்கிச்சூழ்ந்தெரிவையரோடுநின்றான்
அந்தநாளிருந்தயோகியாங்கவர்தம்மைநோக்க. (கூக)

மன்னவன்வெருவிச்சென்றமடந்தையரோடுநீங்கித்
தன்னகர்டைந்தானாதமுனிவனத்தலைவன்றன்னை
முன்னிரைகாத்தசோதிமுகுந்தனாரென்றுஞ்சூழ்ந்த
அன்னமென்னடையார்தம்மையாயர்தம்மடவாரென்றும். (கூஉ)

சிந்தையினிலெண்ணியன்பாற்றேவகிதன்சிங்கமிங்கே
வந்தனனெங்கேயாயர்மடந்தையர்களோடுமென்ன
அந்தமில்சீர்க்குணமுடையோனரசனுடன்றொடர்ந்துபின்போய்க்
கந்தமிகுங்கங்கைகொண்டசோழபுரங்கடிதடைந்து. (கூங)

எத்தலத்தணைந்தான்கொல்லவ்விறைவனென்றீடுபட்டு
முத்தனோர்மரத்தின்கீழேமோகமுற்றருள்சேர்மாற
னெத்திறமென்றுதன்னையிறத்தல்போலிறந்துசாய்ந்தான்
பத்தர்களுய்யக்கொண்டாராதியர்பரிவினோடும். (கூச)

திருவடிவணங்கச்சென்றார்செறிந்தவத்தலத்திற்காணார்
பொருவருஞானியெங்கேபோயினனென்னவோடி
வரும்வழிதோறும்நாடிவந்திவர்கிடக்கைநோக்கி
யருமறைமுதல்வவிங்கேயணைந்ததென்பொருட்டாலென்ன. (௯௫)

சென்றவர்களாங்கணைந்தசெழுந்தவனையெடுத்திருத்தி
யன்றறையநாதமுனியாங்கவர்களொடுமுரைக்குங்
குன்றெடுத்தகருமுகிலுங்கோவியருமென்பால்வந்
தின்றுபிரிந்திவ்வூரிலெய்தினர்பின்யான்போந்தேன். (௯௬)

என்னவுய்யக்கொண்டாருநாதமுனியையென்செய்தீர்
மன்னன்மடவாரொடுமும்மைவணங்கிப்பிரிந்திவ்வூர்புக்கான்
முன்னைமறையின்முடிவுணர்ந்தீரென்றானிருந்தநாதமுனி
யன்னதேயோவெனமீண்டுவீரநாராயணத்தமர்ந்தே. (௯௭)

முன்புபோலயோகத்திலிருந்துமூலாக்கினிமூட்டி
யின்பவாரிச்சுழிமூழ்கியிருந்தான்சிலநாணாதமுனி
பின்புமொருநாளவ்வேந்தன்பிறங்குதானைபுடைசூழத்
துன்பங்கடியுமன்னர்கழல்தொழுவான்வந்தப்பதிபுக்கான். (௯௮)

அந்தநாளில்நாதமுனிமன்னனுரையடிதொழுது
வந்தவாசற்றலைநிற்பமன்னன்மாயன்கழல்வணங்கிச்
சிந்தையாரநாதமுனிதிருத்தாளிறைஞ்சிச்சாமந்தர்
முந்துமுடிமேலடியிட்டுமூரியானைமேல்கொண்டான். (௯௯)

கண்டானதனைநாதமுனிகண்ணன்பிரமாதியருடைய
தண்டார்முடிமேலடியிட்டுத்தபங்கும்பெரியதிருவடிமேல்
கொண்டானென்னச்சோகித்துக்கோதிலடியார்குழாத்திடையில்
மண்டான்பாயலாய்ச்சேர்ந்துமயங்கிச்சாய்ந்தான்மதிமிக்கான். (௧00)

படிமிசையிற்கிடந்தவரைப்பரிவினொடுஞ்சென்றெடுத்து
முடிதடவிமண்டுடைத்துமுன்பிருந்ததானத்தி
லடிகளெழுந்தருள்கவெனவச்சுதனுரைப்பிரியாக்
குடியடியார்கொடுசெல்லக்கோதில்லாநாதமுனி. (௧0௧)

எழுந்தருளியோகத்திற்சிலகாலமிருந்தனனச்
செழுந்தவன்பின்னொருபகற்றன்றிருவடிக்காட்பட்டவரில்
அழுந்துதவத்தோன்குருகைகாவலவனப்பனுக்குக்
கொழுந்துவிடுஞ்சுடர்விளக்காங்குறையாதயோகத்தை. (௧௦௨)

கட்டுரைத்துச்சாத்திரமுங்கருத்திலுறுமெய்யுணர்வா
மெட்டெழுத்துமுய்யக்கொண்டார்க்கறியவெடுத்திசைத்தங்
குட்டெளிவாலீச்சுரமாமுனிகளுடனுரைக்கின்றான்
மட்டவிழ்பூங்குழல்நின்சீர்மனையாட்டிதிருவயிற்றில். (௧௦௩)

உயமுனைவிதியாலன்பாவுனக்கொருமைந்தன்றோன்று
மியமுனைத்துறைவரென்றேயிடுகபேரென்றுஞான
மயமுனைத்தவத்தாற்பெற்றமைந்தனேயுய்யக்கொண்டாய்
துயமுனையறிவித்தோமேயவற்கதைச்சொல்கநீயும். (௧௦௪)

குருகைகாவலவனப்பன்கொழுஞ்சுடர்யோகந்தன்னை
மருவுமம்மைந்தற்காங்கேவழுத்துகவென்னநன்றவ்
விருவரோடொருவர்க்கோதியிருந்தனன்யோகந்தன்னில்
மருவருங்கருணைமிக்கான்சிலபகல்மன்னுநாளில். (௧௦௫)

மன்னவன்வேட்டைக்கேகிமாதரியொருவனோடும்
அன்னமென்னடையாளாங்கோரணிமலர்க்குழலாளோடும்
தன்னுடைச்சேனைகானிற்றவறவோர்குரங்குங்கொண்டு
மின்னவிர்திகிரிமாயன்வீரநாராயணத்தில். (௧௦௬)

வந்துநாதமுனியிருந்தமனையின்வாயிற்றலைநின்றிங்
குந்தையென்செய்கின்றனனென்றேதநாதமுனிமகளா
ரெந்தையோகத்திருக்கின்றானென்றாள்மன்னனிருந்தவனைச்
சிந்தையாரவுறவணங்கிப்போனானந்தச்சேயிழையாள். (௧௦௭)

தாதையிருந்தபரயோகத்தலத்திலெய்தித்தாழ்ந்திறைஞ்சி
வேதமுதல்வவோரிருவர்வில்லுமம்புங்கரத்தேந்தி
யோதுங்குரங்கொன்றுடன்கொண்டிங்கோங்குகோங்கின்குவிமுலையோர்
மாதுதொடாக்கனுமென்னவந்துவாயிற்றலைநின்று. (௧௦௮)

உன்னையென்செய்கின்றானென்றுரைத்துத்திண்ணைத்தலைநின்ற
வென்னைக்கேட்டாரப்பொழுதில்யோகத்திருக்கின்றாரென்றேன்
பின்னைப்போனாரெனக்கூறிப்பெரியபிராட்டியாரனைய
அன்னைநின்றாளதுகேட்டநாதமுனிவனப்பொழுதே. (௧௦௯)

இருவரும்வில்லினாரேலிராமனுமிளையகோவும்
மருமலர்க்குழலிமற்றச்சனகனார்மகளாமன்னா
ரருகணைகுராங்குமுன்னமயிந்திரமரியிற்கற்றோன்
பொருவருநிலையாரெங்கேபோயினாரென்னவோயும். (௧௧௦)

சிந்தையோடெழுந்துபோயதிசையினைமகளார்காட்ட
வந்தநற்றிசைமேலேகியாங்கெதிரணைவோர்தம்மைப்
பந்தணைவிரலாளாங்கோர்வானரம்பாங்குசெல்ல
மந்தரவில்லினார்களிருவராவ்வழிமேற்போக. (௧௧௧)

கண்டதுண்டோவெனக்கேட்பப்போகின்றாரெனக்கண்டார்
கொண்டபெருங்காதலர்க்குக்கூறவிவர்விரைந்தெந்தாய்
புண்டரிகத்தாள்சிவப்பப்போகின்றாயோவெனப்போய்
விண்டருவியாநந்தநீரிழியவிழிதோறும். (௧௧௨)

கங்கைகொண்டசோழபுரக்கடிநகரிற்குடதிசையிற்
றங்குநெடுமதில்வாயில்காக்கின்றார்தங்களொடு
மிங்கிரண்டுவில்லியரையெழின்மருவுமொருகுரங்கைச்
செங்கைவரிவளையணங்கைக்கண்டதுண்டோசெப்புமென. (௧௧௩)

மற்றவர்கள்யாங்காணேம்மறையவனேயெனவறையச்
சிற்றவைசொற்காத்தபிரான்றிருவடிகண்டுறவணங்கப்
பெற்றிலமேயெனமயங்கிப்பெருவழியிற்குருமணியா
ருற்றமரார்மலர்மாரிபொழிந்தேத்தவுறுவினைசேர். (௧௧௪)

காகத்துக்கருள்புரிந்தகாகுத்தாகருணையனே
மேகத்திற்கரியவனேயென்செய்கேனெனவிழுந்து
மோகித்தார்தசரதனார்மோகம்போன்மோகித்தார்
மாகத்தார்தொழுதேத்தவைகுந்தத்தினிதமரும். (௧௧௫)

பெரியதிருவடிவந்து நாதமுனிபேருள்சே
ருரியவெழிலான்மாவைத் திருத்தோண்மேலுறவிருத்தி
விரியுமெழிலண்டங்கள்மேலுலகம்யாராலும்
தெரிவரியபெரும்பாழென் றனைத்தினையுஞ்சீக்கிரத்தில். (ககசா)

கடந்துவிரசைப்புனலாட்டிக்கருணைமிக்கவமானவனு
ரிடங்கொள்கரத்தாற்பரிசிப்பவெதிர்கொண்டிறைஞ்சியங்குள்ளார்
தொடர்ந்துவாழ்த்தவொளிக்கொண்டசோதியாகிநாதமுனி
திடங்கொள்பரமபதம்புக்கத்திருமாமணிமண்டபஞ்செறிந்தான். (ககஎ)

அப்படியேநாதமுனியந்தாமத்தடைந்ததற்பின்
ஒப்பரியபாகவதருய்யக்கொண்டாரதி
செப்பரியான்செய்திறத்தைக்கேட்டந்தத்திருவுருவம்
இப்படியின்மன்னிக்கிடப்பது கண்டடுபட்டே. (ககஅ)

தெள்ளிமகிழ்மாறன்செய்ததமிழமுதை
அள்ளியடியோங்கட்களித்தபானேயென்ன
உள்ளியழுதவ்வுடலைமறைவிதியிற்
பள்ளிப்படுத்தணைந்தபாகவர்நீங்கினர். (கககூ)

[தொடரும்.]

உதவிப்பத்திராதிபர்.